3

செந்தமிழ்ச் செல்வி

ACC-NO-38103

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 – 1980



அரசு...

சிலம்பு-௫௪] வள்ளுவர் ஆண்டு-௨௦௧௧ சித்திரை, May '80 [பரல்-௧

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

௧. மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ.
இயக்குநர், தமிழ்நாட்டரசுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்டம், சென்னை-8

௨. திரு. கொண்டல், சு. மகாதேவன், எம்.ஏ., பி.எசி.
முதல்வர், அரசினர் கலைக்கல்லூரி.

௩. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
முனைவர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பி.எச்.டி.,
மாயூரம்.

௪. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எச்.டி.
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை,

௫. புலவர் இரா இளங்குமரன், தலைமைத் தமிழாசிரியர்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி, திருநகர், மதுரை-6.

௬. திரு. இரா. கல்யாணசுந்தரம், பி.எசி.
பொதுமேலாளர், சை. சி. நூற்பதிப்புக் கழகம், சென்னை.

௭. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

உள்ளுறை

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 125 ஆவது ஆண்டு விழா ௪௧௭

தெ. பொ. மீ. யின் திரிபாராய்ச்சி ௪௨௨

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலைசீனி வேங்கடசாமி மறைவு ௪௩௧

சங்க நூல்களில் சிள்வீடு ௪௩௩

அந்த உணர்வு எங்கே ? - 3 ௪௩௭

பெரும் பெயர் பெற்ற பெருங் கழகம் பெருவாழ்வு பெறுக! ௪௪௨

பண்டைத் தமிழ்ச் சிறுவர் விளையாட்டுகள் ௪௪௭

உலகம் உய்யவழி ௪௫௨

வரிசையறிதல் ௪௫௩

லலிதாங்குர பல்லவகிருகம் ௪௫௬

செய்திகளும் குறிப்புக்களும் ௪௬0

மதிப்புரை ௪௬௩



ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை சீனி வேங்கடசாமி

தோற்றம் :	மறைவு :
16—12—1900	8—5—1980

14.5.80

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫௪	திருவள்ளுவர் ஆண்டு ௨0௧௧, சித்திரை மே 1980	பரல் ௯

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் 125ஆவது ஆண்டு விழா

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."

கன்னித் தமிழன்னைக்குக் காலந்தோறும் கவிஞர் பலர் பல்வகை ஆரங்களைப் பூட்டி மகிழ்ந்துள்ளனர். அவற்றுள் மணி முடியாய்த் திகழ்வன அன்னையின் வாழ்த்தாக அமைந்துள்ள மேற்கண்ட பாடல்கள். இவற்றை வழங்கிய பெருமகன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆவர். 19ஆம் நூற்றுண்டு நாடகத் தமிழின் நாயகமாகத் தோன்றிய 'மனோன்மணீயம்' நாடகத்தில் அதன்ஆசிரியரான சுந்தரம் பிள்ளை பாடிய 'தமிழ்த் தெய்வ வணக்கம்' இவையாகும்.

தமிழ் ஒரு தனித்த மொழி, மூத்த மொழி, முதன்மையான மொழி என்பதைத் தமிழருக்கே உணர்த்தியவர் மேனாட்டறிஞரான

கால்டுவெல் பெருமகனார். தமிழ்மொழி தனித்தியங்கவல்லது. அதில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை அகற்றிவிட்டால் அதன் சிறப்பு ஓங்குமே தவிரக் குறையாது என்று எடுத்துக் கூறினார் கால்டுவெல். அதுவே பிற திராவிட மொழிகளுக்கு மூத்த முதன் மொழி என்றார்.

அவ் வுண்மையை உறுதியாக நம்பியவர் பேரா. சுந்தரம் பிள்ளை. அதனை உள்ளடக்கியே 'எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!' என்று தமிழ்த்தாயை வியந்து விளித்து 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்' என்று பாடினார்.

இன்றைய மொழி நூலாசிரியர்கள் பலர் இக் கருத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். தமிழறிஞர்களில் சிலரும் இதனை வெறும் தற்புகழ்ச்சி என்றும் குறிப்பிடுகின்றனர். எது எவ்வாறாயினும் தமிழ் மூத்த மொழி, இலக்கிய, இலக்கண வளமுடைய மொழி, குறைந்தது மூவாயிரம் ஆண்டுகட்கு மேலாகத் தொடர்ந்து மக்களால் பேசப்பட்டு வரும் மொழி என்பதில் ஐயமில்லை. இந் நிலையில் வேற்று மொழி ஒன்றுக்கு அடிமையாகித் தமிழ்மொழியி லுள்ள சிறப்புமிக்க எல்லாமே அம் மொழியிலிருந்துதான் தமிழ் மொழிக்கு வந்தன என்று ஒரு குறிப்பிட்ட இனத்தார் மீண்டும் மீண்டும் தமிழைப் பழித்து, தமிழுணர்வை அழித்து, தமிழி னத்தைத் தாழ்த்தித் தமிழர்கள் தாழ்ந்தவர்கள் என்ற மனப் பான்மையை அம் மக்களிடையே பல நூற்றாண்டுகளாக ஏற்படுத்தி விட்டனர். எனவே ஈராயிரமாண்டுகட்கு முன் தென்னகம் முழுவ தையும் ஆண்ட இனம், கிழக்காசிய நாடுகள் சிலவற்றை ஆண்ட இனம், மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று முதலியவற்றை இழந்து பிறிதோர் இனத்திற்கு வாழ்க்கையின் எல்லா மட்டங் களிலும் அடிமைப்பட்டுக் கிடப்பதைக் கண்ட பேராசிரியர் சுந்தரனார் மேற்காட்டிய தமிழ்த் தாய் வாழ்த்தினைப் பாடி ஆழ்துயிலில் மூழ்கிக் கிடந்த தமிழ்மக்களைத் தட்டி யெழுப்பினார். அவர் முயற்சி வீண் போகவில்லை யென்பதைக் கடந்த ஒரு நூற்றாண்டுக் கால மாகக் கண்கூடாக் கண்டு வருகிறோம். தமிழ் மொழி இன்று இந்த அளவாவது புத்துயிர் பெற்று புது மலர்ச்சியுடன் துலங்குகிறது என்றால் அதற்கு வித்திட்டவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களே ஆவர். அவர் வழி நின்று மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர், கா. சுப்பிரமணிய பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், வி. கனகசபைப்பிள்ளை, பி.தி. சீனிவாச ஐயங்கார், வி.ஆர். இராமச்

சந்திர தீட்சிதர், மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, ந. சி. கந்தையா போன்ற பேரறிஞர்கள் தமிழ்மொழியின் உயர்வையும் தமிழ் இனத்தின் சிறப்பையும் மொழியியல், வரலாறு, கல்வெட்டு போன்ற பல்வகைச் சான்றுகளால் நிறுவினர்.

இவ்வாறு தமிழினத்தின் பெருமையைத் தரணிக் குணர்த்திய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் 125ஆவது பிறந்தநாள் விழா இவ்வாண்டில் தமிழ்மக்கள் வாழுமிடங்கள் அனைத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுதல் வேண்டும். தனிப்பட்ட முறையில் சங்கங்களும் மன்றங்களும் கொண்டாடினாலும் அரசு முற்பட்டு அதனைப் பெருவிழாவாக நிகழ்த்த வேண்டும். இப்போ துள்ள அரசியல் சூழ்நிலையில் புதிய அரசு அமைந்த பின்னரே இதை மேற்கொள்ள வேண்டும். இருவீரும் வேறல் இயற்கையு மன்று. எந்தக் கட்சி ஆட்சிக்கு வரினும் சுந்தரனார்க்கும் தமிழுக்கும் ஆதரவு அளிக்கும் கட்சியாகவே அமையும். எனவே புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் சுந்தரனாரின் 125ஆம் ஆண்டு விழாவைச் சீருஞ்சிறப்புமாக நடத்த வேண்டுமென்று தமிழ் உள்ளங்கள் எதிர்பார்க்கின்றன.

சுந்தரனாரின் மேற்காட்டிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை ஒரு கட்சியினர் ஆட்சியிலிருந்தபோது அரசு நிகழ்ச்சிகளில் தொடக்கப் பாடலாக இருக்கவேண்டுமென அறிவித்தனர். அடுத்த கட்சி ஆட்சிக்கு வந்தபோதும் அம் முறையைக் கைவிடாது ஏற்றுப் போற்றியது. எனவே இரு கட்சியினருக்கும் சுந்தரம் பிள்ளையின் பாலும் அவர்தம் பாடலின் மேலும் உள்ள, பற்றும் மதிப்பும் நமக்கு நன்கு புலனாயின. எனவே சுந்தரனாரின் விழாவை யார் வரினும் சிறப்பாகக் கொண்டாடுவர் என்பது உறுதி.

பேரா. சுந்தரனார் தமிழ் பயிலப்பெறும் கேரளப் பகுதியில் 1855இல் தோன்றினார். இளமையில் நாகை நாராயணசாமிப் பிள்ளையிடம் முறையாகத் தமிழ் பயின்றார். மறைமலையடிகளும் இவ் வாசிரியரிடம் தமிழ் பயின்றவர்தாம். 1876இல் பி. ஏ. பட்டம் பெற்றார்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் இவர்தம் ஆசிரியப் பணி தொடங்கிற்று. பின் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் பணியேற்றார். எம். ஏ. பட்டம் பெற்றபின் அக் கல்லூரியின் தத்துவத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். இடையில் சில ஆண்டுகள் திருவனந்தபுரம் அரண்மனையில் வருவாய்த்துறை ஆணையராகப் பணியாற்றினாலும் மீண்டும் ஆசிரியப் பணிக்கே

திரும்பினார். 1897இல் மறையும்வரை அப் பொறுப்பிலேயே இருந்தார்.

நாற்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்த பேராசிரியர் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியதாகும். முழுநிறைவான வாழ்க்கை வாழ்ந்திருப்பாராயின் இன்னும் பல அருஞ் செல்வங்கள் நமக்குக் கிட்டியிருக்கும். மனோன்மணீயம் போன்ற பல நாடக நூல்களை நாம் பெற்றிருப்போம். இலக்கியம், இலக்கணம், வரலாறு, தத்துவம் போன்ற பல துறைகளில் அவர் சிறந்து விளங்கியதால் பலதுறைகளிலும் ஆய்வுக் கட்டுரைகளையும் அரிய நூல்களையும் படைத்தார்.

அவர்தம் படைப்புகளுள் முடிமணியாகத் திகழ்வது மனோன் மணீயம்ஆகும். அது தமிழில் நல்லநாடகநூல்கள் இல்லையே என்ற குறையைப் போக்குவதற்காக எழுந்த நூல். மேனாட்டு முறையைப் பின்பற்றி அங்கங்களாகவும் களங்களாகவும் உட்பிரிவுகளை அமைத்துக்கொண்டு புதிய வகையில் அமைக்கப்பெற்றது மனோன்மணீயம். கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் தனக்கு ஒப்பானதும் மிகையானதும் இல்லாததாகத் திகழ்வது அந்நாடகம். பேராசிரியர் பல்துறை அறிவைப் பெற்றிருந்தாராயினும் அவருக்குப் புகழைத் தேடித் தந்தது அந் நூலே. 'நாடகப் பேராசிரியர்' என்ற சிறப்புப் பட்டமே அவருக்கு நிலைத்து நிற்கின்றது.

மனோன்மணீயம் மூலக்கதைப் போக்கில் ஆங்கிலக் காப்பியம் ஒன்றைத் தழுவியதாயினும் நூல் முழுவதும் தமிழ் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, வீர உணர்வு ஆகியவற்றை வெளிப் படுத்தும் காப்பிய இலக்கணம் முழுவதும் நிறைந்த தமிழ் நாடக நூலாகும். தமிழ் மறையான திருக்குறள் முதலாகப் பல்வேறு தமிழ் நூல்களையும் பின்பற்றி அவற்றின் கருத்துக்களையும் பண்டைத் தமிழ்ப் பழமொழிகளையும் சுந்தரனார் தம் நூலில் ஆங்காங்கே பொன்னேபோல் பொதிந்து வைத்திருக்கின்றார். அதைப் போன்ற இலக்கிய நயம், உரையாடல் பாங்கு, பாத்திரப் படைப்பு முதலியவற்றைக் கொண்ட மற்றொரு நாடக நூலைப் படைக்க வேண்டுமென்று எத்தனையோ பேர் முயன்றும் இன்னும் படைக்க முடியவில்லை.

இஃதன்றி, நூலகவியலில் முதன் முதலாகத் தமிழில் அரிய நூலைப் படைத்தவர் சுந்தரனார். நூலகவியலில் பகுப்புத்துறை அல்லது பாகுபாடு (classification) என்பது ஒரு முக்கியமான துறையாகும். பகுப்புத் துறைக்கு அடிப்படையானது அறிவு அல்லது பொருட் பாகுபாடு ஆகும், (Knowledge classification)

அத் துறையை விளக்கும் அடிப்படை நூலான ‘நூற்றொகை விளக்கம்’ என்ற நூலைப் படைத்தவர் சுந்தரனார். தமிழ் இலக்கிய நெறியை ஒட்டி அந் நூலையும் நூற்பா வடிவிலேயே அமைத்து அதற்கு அருமையான விளக்கவுரையும் எழுதியுள்ளார். ‘இந்திய நூலகத் தந்தை’ எனப் பெரிதும் போற்றப் பெற்ற மறைந்த பேரறிஞர், டாக்டர். சீ. ரா. அரங்கநாதன் அவர்கள் அந் நூலை எப்போதும் போற்றிப் பாராட்டி மகிழ்வார்கள்.

ஆய்வுத் துறையில் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு திருஞான சம்பந்தரின் கால ஆராய்ச்சியைச் செய்து அதனை நிறுவி யுள்ளார். பின்னெழுந்த இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு அவர்தம் முடிவு வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

பத்துப்பாட்டில் முதல் ஐந்து பாடல்களை ஆங்கிலத்தில் வடித்துத் தந்துள்ளார் பேராசிரியர்.

‘பண்டைக் காலத் திருவாங்கூர்ப் பேரரசர்கள்’ என்ற நூல் ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற அரிய வரலாற்று நூலாகும்.

இவ்வாறு ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளும் கைவரப் பெற்று அவற்றில் சிறந்த படைப்புகளைத் தந்த பேராசிரியர் சுந்தரனாரின் நினைவைத் தமிழ் மக்கள் என்றென்றும் போற்ற வேண்டும்.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் 1967இல் நடை பெற்ற உலகத் தமிழ் மாநாட்டை யொட்டித் தமிழ்ப் புலவர் பெரு மக்களுக்குச் சிலைகள் எடுத்தோம். மனோன்மணீயம் சுந்தரனார்க்குச் சிலை யெடுக்காதுபோனது வருந்துதற்குரியதே. சைவசித்தாந்தநூற் பதிப்புக்கழகம் சுந்தரனார்க்குச் சிலை நிறுவும் திட்டத்துடன் அவர்தம் பெயரிலேயே நாடகப் போட்டி ஒன்றினை நடத்தி, அதில் பரிசு பெற்ற நாடகத்தை நூலாக வெளியிட்டு, அதிலிருந்து கிடைக்கும் விற்பனையில் பத்தில் ஒருபங்கைச் சிலை நிறுவுவதற்கென்றே ஒதுக்கி வைத்துள்ளது. பல்கலைக் கழகங்கள் அத்தகைய நாடக நூல்களை மீண்டும் மீண்டும் பாட நூல்களாக வைத்தால் விற்பனை பெருகும்; வேண்டிய தொகை கிடைக்கும். அஃதில்லாத நிலையில் மிகக் குறைந்த தொகையே சேர்ந்துள்ளது. எனவே அமையவிருக்கும் புதிய அரசு சுந்தரனாரின் 125ஆவது ஆண்டு விழாவைச் சிறப் பாகக் கொண்டாடும்போது உரிய இடத்தில் சிலை நிறுவவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது தமிழ் மக்கள் அனைவருடைய விருப்பமாகும். அது விரைவில் நிறைவேறுமென்று கருதுகிறோம்.

———

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் ௬௮ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமற்கிருதத்தைக் கண்டுபிடித்தபின் மேனாட்டார் ஒப்பியன் மொழிநூலை வளர்த்துக்கொண்டதுபோல், தமிழரும் பாணினீயத்தைப் பின்பற்றியே தமிழிலக்கணம் அமைத்துக்கொண்டனர் என்பது, பேரனே பாட்டனைப் பெற்றான் என்பது போன்றதே. தொல்காப்பியர் சமற்கிருத இலக்கணமும் இலக்கியமுங் கற்றிருந்தார் என்பது உண்மையே. ஆயின், பாணினீயத்தைப் பின்பற்றித் தொல்காப்பியத்தை இயற்றினார் என்பது அறியாமை பற்றியதே. இதை அவர் கூற்றும் பொருளதிகாரமும் தெற்றெனப் புலப்படுத்தும். கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன் தோன்றிய தலைக் கழகக் காலத்திலிருந்து எழுத்து சொல் பொருள் என்னும் மூவதிகாரப்பட்டு, யாப்பையும் அணியையும் பொருளுள் அடக்கி, "ஒண்டீந்துறை" யென்று மாணிக்க வாசகரும் வியக்குமளவு நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்க அகப்பொருள் கொண்டு, மரபாக வழங்கி வந்த தெய்வத் தமிழிலக்கணத்தை, கி. மு. 5ஆம் நூற்றாண்டில் தோன்றி எழுத்துஞ் சொல்லுமே கூறும் பாணினீயத்தின் வழியதாகக் கூறுவது, தமிழைக் காட்டிக் கொடுக்கும் செயலின்பாற்பட்டதேயன்றி வேறாகாது.

இனி, வேதக் காலத்தில் ஆரியர் தமிழரொடு, தொடர்பு கொள்ளவில்லையென்றும், காத்தியாயனர் காலமாகிய கி. மு. 4ஆம் நூற்றாண்டிலேயே அத் தொடர்பு ஏற்பட்டதென்றும், கூறுவதும் வரலாற்றொடு முற்றும் முரண்பட்டதாகும்.

ஒரு காலத்தில் இந்தியா முழுதும் தமிழரே பரவியிருந்தனர். வடக்கே செல்லச் செல்ல மொழியும் நாளடைவில் மெல்ல மெல்லத் திரிந்தது. அதனால், வடநாடுகளைப் பிற்காலத்தில் 'மொழி பெயர் தேயம்' என்றனர்.

"மொழிபெயர் பன்மலை யிறப்பினும்
ஒழிதல் செல்லா தொண்டொடி குணனே." (ஐங். 321.)

"மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன" (அகம். 67.)

"பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந். 11)

மொழிமாறு தேயம் என்னாது மொழிபெயர் தேயம் என்றதை நோக்குக. பெயர்தல்=ஒரேமொழி மெல்லமெல்லத் திரிதல்.

குமரிமலையும் பஃறுளியாறும் மூழ்கியபின், அவற்றுக்கீடாகப் பாண்டியன் பனிமலையையும் கங்கையாற்றையுங் கொண்டான். அடியார்க்கு நல்லார் சிறப்புக் குறிப்பைப் பார்க்க (சிலப். 11 : 17-22).

குமரி நாட்டுச் சிவநெறியார் அணிந்து வந்ததும் நேபாள நாட்டுச் சிவமணியே (உருத்திராக்கமே).

வங்கநாடு சென்று வாழ்ந்த தமிழ வணிகரே, காளிகோயில் சமைத்துக் காளிக்கோட்டம் என்று நகர்ப் பெயரிட்டனர். அது இன்று கல்கத்தா என்று ஆங்கிலத்தில் திரிந்து வழங்குகின்றது. தமிழகம் (Tamluk) என்றொரு நகரும் அந் நாட்டில் தோன்றிற்று. நில வாணிகமும் நீர் வாணிகமும் வடநாடுகளொடு தொடர்ந்து நிகழ்ந்து வந்தன.

வடநாட்டார் குமரியாடவும் தென்னாட்டார் கங்கையாடவும் வந்து செல்வது, தொன்றுதொட்ட வழக்கமாயிருந்து வந்தது. பாரதக் காலத்தில் அர்ச்சுனனும் குமரியாட வந்து பாண்டியன் குமரியை மணந்தான்.

வேத ஆரியருள் முதன்முதலாக விந்தியமலை தாண்டித் தென்னாடு வந்த ஆரிய முனிவர் அகத்தியர், அதனால் விந்தமலையின் செருக்கடக்கியவர் எனச் சிறப்பிக்கப்பட்டார். அவருக்குப்பின் வந்தவர் நாரதர். பின்னர்த் தக்கணபதம் என்னும் ஒழுங்கான பாதையை அமைத்துக் கொண்டனர் ஆரியர்.

இயற்கையையும் ஐம்பூதங்களையும் இருசுடரையும் ஆவிகளையும் சோமச்சாறான கள்ளையுமே வணங்கி வந்த வேத ஆரியர், தமிழரொடு தொடர்பு கொண்ட பின்னரே, காளி வணக்கத்தையும் குமர வணக்கத்தையும் சிவதிருமால் மதங்களையும் மேற்கொண்டனர். அதன்பின் பதினெண் புராணங்களும் இதிகாசங்களும் உபநிடதங்களும் ஆகமங்களும் காவிய நாடகங்களும் வியாகரணங்களும் நிகண்டுகளும் சாத்திரங்களும் பிறவும் எழுந்தன.

இங்ஙனமிருக்கவும், தொல்காப்பியமே முதல் தமிழ் நூலென்றும், அதுவும் பாணினீயத்தைத் தழுவியதென்றும், முதன் முதலாக "நளியிரு முந்நீர் நாவா யோட்டி"ச் (புறம். 66) சுற்றுக்

கடலோடியாய்த் (circumnavigator) திகழ்ந்து வடவை (Aurora Borealis) கண்ட தமிழனைக் கி. மு. 4ஆம் நூற்றாண்டுவரை வட இந்தியாவும் அறியாதவன் என்று, இறப்ப இழித்துக் கூறுவது இளஞ்சிறாரும் எள்ளி நகையாடத்தக்கதே.

குறிப்பு: மூலத் தமிழ் நாடகநூலினின்று மொழிபெயர்க்கப் பட்ட காசுமீர வடமொழிப் பரத சாத்திரம், மறிநிழலீடாக மீண்டும் மூலமொழியான தமிழில் மொழிபெயர்க்கப்பட விருக்கின்றது. இதைக் கண்டு அல்லது கேட்டு மூலமொழிபற்றி மயங்கற்க.

"நாடகத் தமிழ்நூலாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன." என்று அடியார்க்கு நல்லார் தம் உரைப் பாயிரத்தில், உரைத்திருப்பதால், வடமொழி மொழி பெயர்ப்பின் மூலத் தமிழ்ப் பரதம் அழிக்கப்பட்டதென உய்த் துணர்க. இது என் 'முத்தமிழ்' என்னும் நூலில் விரிவாக விளக்கப்படும்.

கூற்று: அசோகனும் தமிழ்நாடும்

"சந்திரகுப்தன் காலத்தில், விதப்பாக அசோகன் காலத்தே, (வடவர் தென்னவர்) தொடர்பு நெருங்கியிருந்தது. அசோகன் கட்டளை வாசகங்கள் பிரமகிரிவரை தெற்கிற் காணப்படுகின்றன. அவன் விடுசெய்திகள் தமிழரசர் உட்பட அனைவர்க்கும் விடப் பட்டுள. அவரொடு தொடர்பு நெருங்கியதாகியிருத்தல் வேண்டும். அசோகன் சேரர், சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர் அல்லது அதிகமானர் என்னும் தமிழ்நாட்டரசர் நால்வரைப்பற்றிக் கூறு கின்றான். அவருள் முதல் மூவரே அரசரென்றும், அதிகமானர் சேரரொடு உறவுகொள்ள முயன்ற சிற்றரசரேயென்றும், தமிழ் மரபுவழிச் செய்தி கூறுகின்றது. சங்கக் காலத்திலும் தொல்காப் பியத்திலும் இந்நிலைமையே காண்கின்றோம். அதிகமானர் வல்லமையுள்ளவராயிருந்து ஏனை மூவரசரொடும் அரசியல் தலைமைக்குப் போட்டியிட்ட காலம் ஒன்று, அதற்குமுன் இருந்திருத் தல் வேண்டும். அது அசோகன் கட்டளைவாசகங்கள் உருவான காலமாயிருந்திருத்தல் வேண்டும். தமிழ் எழுத்துமுறை அனைத் திந்திய எழுத்துமுறையின் தழுவிய அமைப்பேயென்றும், அதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் என்றும், இன்னொரு கட்டுரையிற் சொல்லாடப்பட்டுள்ளது. அசோகன் விடுசெய்தி பொதுமகன் உள்ளத்தைக் கவர்ந்ததனால், அவனுக்கு எழுத்தறிவின்மீது வேட்கை வளர்ந்தது. அது அனைத்திந்தியவெழுத்தைத் தழுவித்

தமிழெழுத்தை யமைத்தற்கு அகத் தூண்டுகோலாயிற்று அல்லது அதை விரைவுபடுத்திற்று. இது அங்ஙனமாயின், தொல்காப்பியம் அசோகன் காலத்திற்குப் பின்னரே தோன்றி யிருத்தல் கூடும்.

புள்ளிக் கொள்கை

"புள்ளிக்கொள்கை பற்றியும் பலவிடத்துக் கூறப்பட்டது. கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும்தான் புள்ளி தோன்றுகின்றது என்று குறிப்பிடப்பட்டது. வெட்டெழுத்துக் களின் எழுத்துமுறைமை இலக்கணக் கொள்கையைப் பின்பற்று வதற்கு ஒரு நூற்றாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சென்றிருக்குமென்று நாம் கருதிக்கொள்ளலாம். வெட்டெழுத் துக்கள் பொதுமக்கள் எல்லார்க்குமென்று ஏற்பட்டவை. பொது மக்கள் வழக்கங்கள் எளிதில் மாறுவதில்லை, ஆதலால், தொல் காப்பியம் கிறித்தவவூழித் திருப்பத்தில் அல்லது அதற்குச் சற்று முந்தித் தோன்றியதாகக் கொள்ளலாம். எங்ஙனமிருப்பினும், சமற்கிருதத்திற்போல் எழுத்து முறைமைக்குத் தேவையின்றியே இலக்கணக்கூறுபடுப்பு வளர்ச்சியடைந்திருக்கக் கூடியதே. இனி, எழுத்துமுறைமையைப் பற்றிய குறிப்புக்களெல்லாம் பிற்கால வளர்ச்சிகள் என்பதும் கொள்ளக்கூடியதே.

இலக்கணம்

"ஆனால், அங்ஙனமாயினும் அது காத்தியாயனர் காலத்திற்கு முந்தியதாகாது. காத்தியாயனரே இலக்கணம் என்னும் சொல் லாட்சியை, "லக்ஷ்ய" அல்லது வழக்கு என்பதை அடிப்படை யாகக் கொண்ட அணங்கத்தைக் (இலக்கணத்தைக்) குறித்த தென்று விளக்க வேண்டியிருந்தது. ஏனெனின், தமிழிலக்கணம் தமிழ்நாட்டில் இக் கல்வியின் நெடுந்தொன்மையைக் காட்டு கின்றது.

தொல்காப்பியத்தில் வெவ்வேறு படைகள்

"முற்காலத்தவர் ஒருவரும் பிற்காலத்தவர் ஒருவருமாக இருபெரு நூலாசிரியர் தொல்காப்பியர் என்னும் பொதுப்பெயர் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட, மயக்கத்தையும் குழப்பத்தையும் யாம் ஏற்கெனவே விளக்கியிருக்கின்றேம். இக் கருத்துப்படி மயக்கம் நேரக் கூடியதாதல் இற்றைத் தொல்காப்பியத்தைக் கவனமாகக் கூறுபடுத்தி ஆயத் தூண்டுகின்றது. அத்தகைக் கூறுபாட்டாய்வுதான் அந்நூலின் பல்வேறு படைகளை வெளிப்

படுத்திக் காட்டவொண்ணும். அப் படைகட்கு வேறு காரணங்கள் பற்றிக் காலங் குறித்தல்வேண்டும்.''

மறுப்பு :

அசோகன் காலம் கி. மு. 272-231. குமரிநாட்டினின்று முதற்கால மக்கள் வடகிழக்கும் வடக்கும் வடமேற்குமாக வட ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் சென்றபின், அவர் வழியினர் இந்தியாவிற்குத் திரும்பி வருமுன்னும், வட இந்தியாவரை திரவிடர் பெரும்பான்மையராகவும் தமிழர் சிறுபான்மையராகவும் பரவியிருந்தனர். தமிழரே திரவிடராகவும் திரவிடரே பிராகிருத ராகவும் மாறியதனுல், ஆரியர் வந்த காலத்தில் வடஇந்தியர் பெரும்பாலும் பிராகிருதராகவும், நடுவிந்தியர் பெரும்பாலும் திரவிடராகவும் இருந்தனர் என்று கொள்ளலாம்.

கி. மு. 4ஆம் நூற்ருண்டுவரை, சமற்கிருத இலக்கியத்திற் **சேர சோழ பாண்டியம்** என்னும் முத்தமிழ்த் தென்னுட்டரசுகளே குறிக்கப்பட்டுள்ளன. ஆயின், கி. மு. 3ஆம் நூற்ருண்டிற் பொறிக்கப்பட்ட அசோகன் கல்வெட்டுக்களில், **பாண்டியம் சோழம் கேரளபுத்திரம்** (சேரலம்) என்னும் முத்தமிழ் அரசக் குடிகளுடன் **சத்தியபுத்திரர்** என்னும் வேருேர் அரச மரபினரும் குறிக்கப்படு கின்றனர். அச் சத்திய புத்திரரைத் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த **அதிகமானர்** என்னும் சிற்றரசக்குடியினராகப் **பர். தெ. பொ. மீ.** கூறியிருக்கின்ருர்.

அதிகமானர் ஒரு பழஞ்சேரர் கிளையைச் சேர்ந்த சிற்றரச ராதலின், அவரைத் தனியே பிரித்துக்கூறத் தேவையில்லை. கடைக்கழகக் காலத்தில், மூவேந்தருக்கடுத்தபடியாக வல்லமை யோடிருந்து, **கோசர்** என்னும் ஒரு வகுப்பார் தமிழகத்தின் வட மேலைப் பகுதியான துளுநாட்டை ஆண்டுவந்ததாக, எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.

''நாலூர்க் கோசர் நன்மொழி'' (குறுந். 15), ''ஒன்று மொழிக் கோசர்'' (ஷ 73), ''மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்'' (அகநா. 15), ''வடுவுடை முகத்தர் கடுங்கட் கோசர்'' (ஷ 90), ''காப்புக்கை நிறுத்த பல்வேற்கோசர்'' (ஷ113), ''ஒன்று மொழிக் கோசர்'' (ஷ 196), ''வாய்மொழி நிலைஇய சேண்விளக்குநல்லிசை வளங்கெழு கோசர்'' (ஷ 205), ''பல்லிளங் கோசர்'' (ஷ 216), ''வெல்கொடித் துனைகா லன்ன புனைதேர்க் கோசர்'' (ஷ 251), ''ஊர்முது கோசர்'' (ஷ 262), ''வென்வேல் இளம்பல் கோசர்'' (புறநா. 169), ''வலம்புரி கோசர்'' (ஷ 283), ''நனைக்கள்ளின்

மனைக் கோசர்'' (ஷி 369), ''அவையகம் விளங்க நான்மொழிக் கோசர்'' (மதுரைக். 508-9), ''கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்'' (ஷி 773), ''அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைதொழில் என்றும் மாருதாயிற்று.'' (சிலப். உரைபெறு கட்டுரை.)

''கோசர்......துளுநாட்டன்ன'' என்று அகநானூற்றுப்பா (15) கூறுவதால் அவர் துளுநாட்டை ஆண்டு வந்தவரென்று தெரிகின்றது. சிலப்பதிகாரம் சேரன், சோழன், பாண்டியன், கயவாகு என்னும் வேந்தரொடு கோசரையுஞ் சேர்த்துக் கூறுவதால், அவர் பெருமை அறியப்படும்.

ஒன்றுமொழிக்கோசர், நன்மொழிக்கோசர், வாய்மொழிக் கோசர் என்று பலவிடத்தும் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பது, அவரது சொற்றவருமைப் பண்பைத் தெற்றெனக் காட்டும். அதனால், அவர் ஒருகால் சத்தியபுத்திரர் என்று அசோகன் கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டிருக்கலாம். சொற்றவருமை என்பது, வாய்நேர்ந்த உதவியைச் செய்யும் அறப்பண்பிற்கும் வஞ்சினத்தை நிறைவேற்றும் மறப்பண்பிற்கும் பொதுவாம்.

கடைக்கழகச் செய்யுட்கள் கோசரை வம்ப மள்ளர் என்று குறியாமையின், அசோகன் காலத்திலும் அவர் குடியூன்றிய ஒரு தமிழக மறவர் வகுப்பினராயிருந்திருக்கலாம்.

''துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர் (அகநா. 251)

என்னும் அகநானூற்றுப் பகுதியும் இதை ஒருவாறுணர்த்தும்.

ஐம்பெரு வேளிருட் சிலர், ஒரோவிடத்துத் தமக்கு ஆற்றல் விஞ்சியபோது வேந்தர் ஒருவரையும் பலரையும் எதிர்த்தாரேனும் தமிழகம் தொன்றுதொட்டுத் தொல்காப்பியர் காலம்வரை மூவேந்தராட்சிக்குட்பட்டே யிருந்துவந்ததென்பது,

''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்''

என்னும் தொல்காப்பிய அடியால் (செய். 78) விளங்கும்.

அசோகன் காலத்தில் அதிகமான் கை தமிழகத்தில் ஓங்கியிருந்ததென்பதற்கு, யாதொரு சான்றுமில்லை.

இற்றைத் தமிழ்ப் புலவியத்துள் தொல்காப்பியமே முதற் பொத்தகமாயிருத்தல் பற்றி, ஆராய்ச்சியில்லாரெல்லாம் அதுவே முதல்தமிழ்நூல் என மயங்கிக்கொண்டிருக்கின்றனர். வையாபுரியரோவெனின், அதையும் பாணினீயத்தின் வழிநூலாகக் காட்டி வருகின்றனர்.

தொல்காப்பியம் படுகுழிகளும் கவர்நெறிகளும் நிறைந்தது. ஆதலால், மாந்தன் வரலாற்றாராய்ச்சியும் மொழிவரலாற்றாராய்ச்சியும் தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியும் இல்லாதவர், கி. மு 1200 போல் தோன்றிய இலக்கியத் திரிமொழியாகிய சமற்கிருத அறிவைக்கொண்டு, கி. மு. நூறாயிரம் ஆண்டுகட்குமுன் குமரி நாட்டில் தோன்றிய மாந்தன் முதன்மொழியாகிய தமிழியல்பை அறியப்புகுவது, நாழிகொண்டு ஆழியை அளந்தறியத் துணிவதே யொக்கும்.

அசோகன் கல்வெட்டுச் செய்திகளாற் கவரப்பட்ட தமிழகப் பொதுமக்கள், அவற்றைத் தாமே படித்தறிய வேண்டுமென்னும் அவாவினால் உந்தப்பட்டு, அவற்றின் பிராமியெழுத்தைப் பயின்று கொண்டன ரென்றும், அதுவே தமிழ் நெடுங்கணக்குத் தோற்றமென்றும், பர். தெ. பொ. மீ. தம் நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டிருப்பது, ஆகா! எத்துணை அருமையான உய்த்துணர்வு! இது விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் வேறெவர்க்கும் தோன்றியிருக்கக் கூடாத விழுப்புல மணிக்கருத்தே! ஒரு கல்லறைத் தோட்டவாயிலின் மேல் "நாய்கள் புகற்க!" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்த பலகையைக் கண்டவுடன், ஒரு நாய் புகாது நின்று விட்டதென்று கூறும் பிக்குவிக்குத் தாட்களை (Pickwick papers) விட இது நகைச்சுவை விஞ்சியதே! இதனால், டிக்கென்சை (Dickens) வென்றுவிட்டார் பர் தெ. பொ. மீ. யார் என்றே சொல்லலாம்.

அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தைத் தமிழ்ப் பொதுமக்கள் கற்றபின், தொல்காப்பியம் தோன்றிற்றென்று, தமிழை இழித்தும் பழித்தும் புறக்கணிக்க வேண்டுமென்னுங் கருத்திருந்தாலன்றி, தொல்காப்பியங் கற்ற எவருஞ் சொல்லத் துணியார்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்." (எழுத். 15)

என்னும் நூற்பாவிற்குப் பின்,

''எகர ஒகரத் தியற்கையும் அற்றே.''　　(ஷை 16)

என்றுள்ள நூற்பா, தொல்காப்பியப் படுகுழிகளுள் ஒன்றாகும். இது பின்னர் வேறொரு கட்டுரையில் விரிவாக விளக்கப்படும்.

தமிழ் நெடுங்கணக்கு அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தி னின்று பொதுமக்கள் தோற்றுவித்ததென்னும் முழுத்தவறான கருத்தை அடிப்படையாக வைத்தே, பர். தெ. பொ. மீ. மேற் கொண்டு ஆராய்ந்து செல்கின்றார் ''முதற்கோணல் முற்றுங் கோணல்.'' என்றவாறு, அவர் ஆராய்ச்சி அடிப்படைத் தவற்றினால் முற்றுந் தவறாக முடிகின்றது.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகை யெழுத்து வேறு பாடும், அவற்றிற்கு வரிவடிவ வேறுபாடும் உள்ள நெடுங்கணக்கு முறை உலகில் முதன்முதல் தமிழிலேயே தோன்றிற்றென்பது, முன்னரே கூறப்பட்டது. மெய்க்குத் தனிவடிவில்லாது தோன்றிய குகைக் கல்வெட்டுப் பிராமியெழுத்தை அடிப்படையாகக் கொண்ட தனால், தமிழ் மெய்யெழுத்திற்கும் புள்ளிக்குறி கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிற்றென்பது, உண்மைக்கு முற்றும் மாறாகும்.

ஒரு நாட்டு மக்களை நல்வழிப்படுத்த அந்நாட்டு அரசனுக்கே இயலுமாதலால், அசோகன் தன் ஆட்சியெல்லைக்குள் பொறித்த பாறை குகை கம்பம் ஆகிய மூவிடக் கல்வெட்டுக்களிலும், தன் அதிகாரத்திற்குட்பட்டவர்க்குக் கட்டளையாகவும் உட்படாத எல்லைப் புறநாட்டரசர்க்கு நட்புமுறைப்பட்ட நல்லுரையாகவும், துன்புறுத் தாமையை அடிப்படையாகக் கொண்ட அன்பு நெறியீடுகளைக் குறித்தது, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசரை நோக்கியதே யன்றிப் பொதுமக்களை நோக்கியதன்று. ஓர் அரசன் நட்பு நிலையில் மற்றோர் அரசனின் குடிகட்கு நேரடியாக ஏதேனும் எழுதுவது இயல்புமன்று; முறையுமன்று.

கீழ்வரும் அசோகன் கல்வெட்டுச் செய்தியை நோக்குக.

2-ஆம் பாறைக் கல்வெட்டு

(உவில்சன் (**Wilson**) மொழிபெயர்ப்பு)

''In all the subjugated territories of the king *Priyadasi*, the beloved of the gods, and also in the hordering countries,

as *Choda*, *palaya* (*or paraya*) *Satyaputra*, *Keralaputra*, *Tamba pani* it is proclaimed, and ANTIOCHUS by name the Yona (or *Yavana*) raja and those princes who are nearer to or allied with that monarch, universally are apprised that two designs have been cherished by *priyadasi*, one (design) regarding men, and one relating to animals; and whatever herbs are useful to men or useful to animals wherever there are none, such have been everywhere caused to be conveyed and planted and roots and fruits wherever there are none, such have been everywhere conveyed and planted; and on the roads wells have been caused to be dug, and trees have been planted for the respective enjoyment of animals and men."

(Corpus Inscriptionum Indicarum, Vol. I, pp. 117-8)

இதில் "Palaya" என்றது பாண்டியனை; Tambapan (தாம்பிரபரணி) என்றது இலங்கையை. அசோகன் கல்வெட்டுச் செய்தி சேர சோழ பாண்டிய சத்தியபுத்திரராகிய அரசரையே நோக்கிய தென்பது, இதனால் தெள்ளத் தெளிவாம். மேலும் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது வடவெல்லைப் புறத்திலேயேயன்றித் தமிழகத்துள்ளன்று. அதனால் தமிழப் பொதுமக்கள் அதனை அறிந்தே யிரார்; கண்டிரார் என்பதைச் சொல்லவே வேண்டுவ தின்று.

ஒரு மொழியிற் குறுங்கணக்காகவேனும் நெடுங்கணக்காக வேனும் வண்ணமாலை ஏற்படுவது, அறிஞராலேயேயன்றிக் கல்லாப் பொதுமக்களாலன்று. ஆகவே, தமிழப் பொதுமக்கள் அசோகன் கல்வெட்டினின்று தமிழெழுத்தைக் கற்றுக் கொண்டது, முடவன் முண்மரமேறிக் கொம்புத்தேனைக் கொணர்ந்த செய்தியே யாகும்.

இனி, எழுத்தின்றியே சமற்கிருத இலக்கணம் தோன்றினாற் போன்று தமிழிலும் தோன்றியிருக்கலாமென்றும், தொல்காப்பியத்தி லுள்ள இலக்கணக் குறிப்புக்களெல்லாம், பிற்காலத்தன வென்றும், பர். தெ. பொ. மீ. கூறியிருப்பது, அவருக்குத் தமிழிலக்கணத்தைப் பற்றித் தெளிவான கருத்தின்மையைத் தெளிவாகக் காட்டும்.

இலக்கணம், இலக்கியம் என்னும் சொல் வரலாறு பின்னர்த் தெரிவிக்கப்படும்.

ஆராய்ச்சிப் பேரறிஞர்
மயிலை சீனி வேங்கடசாமி மறைவு

தமிழ்ப்புலமையும், ஆராய்ச்சியில் ஆர்வமும், நுண்மாண் நுழைபுலமும் வாய்ந்த கழக நூலாசிரியர் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் தமது 80ஆவது அகவையில், 8-5-1980 இல் இராயப்பேட்டை மருத்துவமனையில் காலமானார்கள் என்ற செய்தி கேட்டு ஆற்றொணாத்துயர் எய்துகின்றோம்.

அறிஞர் வேங்கடசாமி அவர்கள் 1900ஆம்ஆண்டில் மயிலை சீனி வாசனார் என்னும் தமிழ்ப் புலமையும் மருத்துவப் பயிற்சியுமுடைய பெருமகனாரின் இளைய மகனாராகப் பிறந்தார். மயிலை சீனி கோவிந் தராசனார் என்னும் தமிழ்ப்புலமையாளர் இவர்தம் தமையனாராவார். திரு வேங்கடசாமியார், தம் தமையனாரிடத்திலும், பேராசிரியர் ச. த. சற்குணரிடத்திலும் தமிழ்பயின்று தக்க புலமை எய்தினார். தமிழிலக்கியங்களைப் படிப்பதும் ஆராய்வதுமாக இருந்த இவர், தம் தமையனார் மறைவுக்குப்பின் குடும்பச்சுமையினை ஏற்கவேண்டி யவரானார். முதலில் ஒரு கடையில் எழுத்தராகப் பணி ஏற்றார். பின்னர்த் 'திராவிடன்' என்னும் நாளிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணியாற்றினார். இப் பணிகளால் தமிழை மேலும் பயில்வதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லாமற் போகவே, நகராண் மைக்கழகப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றத் துவங்கி னார். இவர் பள்ளி இறுதி வரையிலுமே கல்வி கற்றவர். எனி னும் பன்னூற்பயிற்சியால் நாளடைவில் சிறந்த அறிஞரானார்.

தமிழ்ப் பணிக்கும், ஆராய்ச்சிக்குமே தமது வாழ்நாளைச் செலவிட எண்ணிய இவர் மணமுடியாமலிருப்பதே சாலச்சிறந்த தெனக் கருதினர் போலும். அதனால் தனித்தே வாழ்ந்தார். கற்றல், ஆராய்தல் என்றிருந்த இவர் அவ்வப்போது தாம் கண்ட உண்மைகளைக் கட்டுரைகளாக்கித் திராவிடன், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்நாடு, குடியரசு, ஈழகேசரி முதலிய இதழ்களில் வெளியிட்டு வந்தார். இதனால் இவர்தம் நுண்மாண் நுழைபுலம் மறைமலையடிகள், விபுலானந்தஅடிகள், திரு. வி. க., கா. சு.பிள்ளை

போன்ற பேரறிஞர்களின் உள்ளத்தைக் கவரலாயிற்று. அப் பெரியார்கள் தொடர்பும் இவருக்குக் கிட்டிற்று.

இங்ஙனம் அறிவுத்துறையில் விரைந்து முன்னேறிய இவர் பல அரியநூல்களை எழுதினர். அவற்றுள் கிறித்துவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், தமிழர்வளர்த்த அழகுக் கலைகள், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், இறையனர் அகப்பொருள் ஆராய்ச்சி, மறைந்துபோன தமிழ்நூல்கள், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் என்னும் ஆராய்ச்சி நூல்கள் குறிப்பிடத் தக்கவை! 'மனேன்மணீயம்' நாடகத்தைப் புதிய முறையில் பதிப்பித்தார்.

இப் பெரியாரின் மணிவிழா 17—3—1961இல் சென்னைக் கோகலே மண்டபத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். கணபதியா பிள்ளை அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ் விழாவில் இவருக்கு 'ஆராய்ச்சி அறிஞர்' என்றபட்டத்தினை வழங்கி மகிழ்ந்தனர் அறிஞர்கள்.

அறிஞர் சீனிவேங்கடசாமி அவர்கட்கும் நம் கழகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கழக ஆட்சிப் பொறுப்பாளரிடம் இவர் மிகுந்த பற்றுக் கொண்டவர். கழக நூலாசிரியருள் இவர் மிகச் சிறந்து விளங்கினர். கழக 1008ஆவது வெளியீட்டு விழாவின் போது இவர் கேடயம் அளித்துப் பாராட்டப் பெற்ருர்.

இவ்வாறு பல்லாண்டுகள் தமிழ்த் தொண்டும், ஆராய்ச்சிப் பணியும் மேற்கொண்ட இப் புலவர் பெருமகனுருக்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் சென்ற மார்ச்சுத் திங்களில் '**பேரவைச் செம்மல்**' என்னும் பட்டமும் நாலாயிரம் வெண்பொற் காசுகளும், பொற்பதக்க மொன்றும் வழங்கிச் சிறப்பித்தது. தமிழக அரசும் கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகள் திங்கள்தோறும் பணக்கொடை அளித்து வந்தது.

இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்து புகழேணியில் ஏறிய இப் பெரியார் கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து 8-5-80இல் இறையடி சேர்ந்தார்கள். இவர்தம் மறைவு ஆராய்ச்சி உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் மறைந்த பெரியாரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

———

சங்க நூல்களில் சிள்வீடு

(Cicadas in Sangam Literature)

[பி. எல். சாமி, ஐ. ஏ. எசு.]

சங்க நூல்களில் அரிதாகக் கூறப்பட்டுள்ள ஒரு பூச்சி சிள்வீடாகும். கேரளத்தில் 'அமைதிப் பள்ளத்தாக்கு மின்திட்டத்தை'ப்பற்றிக் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. Silent Valley Project என்ற பெயரே இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள காடுகளில் சிள்வீடு என்ற பூச்சி ஓசையிடாமல் அமைதியாக இருப்பதன் காரணமாகவே வந்தது. தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பெரும்பாலான காடுகளில் இந்தப் பூச்சிகள் அடிக்கடி ஒருவகையான சீழ்க்கை ஓசையை (whining incessantly) எழுப்பிக்கொண்டிருக்கும். இந்த ஓசை நெடுந்தொலைவில் கேட்கும். பூச்சியினத்தில் சிள்வீடு என்ற பூச்சிதான் சிறப்புமிக்க பாடும் பூச்சி என்று கருதுவர். (Cicadas are no doubt the celebrated musicians of the insect world - The Hindu, Magazine section, April 1980) இந்தப் பூச்சியை இனங்கண்டு சங்கப் புலவர்கள் பாடியிருப்பது வியப்புக்குரியது.

''தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலி
னுறுபெயல் வறந்த வோடுதேர் நனந்தலை
யுருத்தெழு குரல குடிஞைச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப வரைய
கல்லெறி யிசையி னிரட்டு மாங்கண்
சிள்வீடு கறங்குஞ் சிறியிலை வேலத்
தூமுறு விளைநெற் றுதிரக் காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழியக்'' —அகம் 89

''வேர்முழு துலறி நின்ற புழற்காற்
றேர்மணி இசையிற் சிள்வீ டார்க்கும்
வற்றல் மரத்த பொற்றலை யோதி
வெயிற்கவி னிழந்த வைப்பிற் பையுள்கொள'' —அகம் 145

''ஐயந் தெளியரோ நீயே பலவுடன்
வறன்மரம் பொருந்திய சிள்வீ டுமணர்
கணநிரை மணியி னார்க்குஞ் சுரனிறந்து'' —அகம் 303

''உலவை ஓமை ஒல்குநிலை ஒடுங்கிச்
சிள்வீடு கறங்கும் சேய்நாட்டு அத்தம்'' —நற்றிணை 252

அகநானூற்றுப் பாட்டிற்கு (89) எழுதிய பழைய உரையில் 'கவ்வைப்பரப்பு என்றது சிள்வீடு ஆரவாரத்தையுடைய பரப்பின தாகும்' என்று கூறிய பொருள் மிகமிகப் பொருத்தமானதாகும். அறிவியற் செய்தியின் அடிப்படையானதாகும். கவ்வைப் பரப்பு என்பதை ஆங்கிலத்தில் விளக்க வேண்டுமானல் 'Captive listeners' என்று கூறலாம். ஏனென்ருல் இயற்கைச் சூழ்நிலையில் சிள்வீட்டின் ஓசையை மனிதன் கேட்டுப் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். சிள்வீடுகள் பகற்காலத்தில் அதுவும் கடும் வெயில் சுடும் வேளையில்கூட்டமாக உரத்த குரலில் ஓசையிடும் என்பதை அறிவியலார் கண்டு கூறியுள்ளனர். அகநானூற்றுப் பாடலிலும் (89) 'ஞாயிறு தெறுகதிரால் காயும்' வேனிற்காலத்தில், அதுவும் மழை பெய்யாமல் வறண்டு பேய்த் தேர் அலை அலையாக ஓடும் காலத்தில் சிள்வீடு கடுத்த ஓசையிடும் என்று அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். (They are diurnal in their habits. They like to sing during the day time, that too in the hottest hours of the day. Cicadas are plunged in gloom and they stop singing (Particularly singing in chorus) if the sun's face is covered even by a passing cloud) அகநானூற்றில் கடும் வெயிலில் சிள்வீடு ஓசையிட்டதாகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். சிள்வீடு என்ற பூச்சிகள் 'சிள்' என்ற ஓசையுடன் விட்டு விட்டு ஒலிப்பதையும் சங்கப் புலவர்கள் தெரிவித்தனர். சிள்வீடு கடும் வெயில் காயும்போது ஓசையிடும். கதிரவனை மேகம் மறைக்கும்போது உடனே ஓசை யிடுவதை விட்டுவிடும் என்று அறிவியலார் கூறியுள்ளனர். இவ்வாறு 'சிள்ளென்று' ஓசையிட்டு, விட்டு விட்டு ஒலிப்பதால் இதைச் 'சிள்வீடு' என்றழைத்தனர். அகநானூற்றிற்கு உரை யெழுதிய பழைய உரை ஆசிரியர் தமிழகத்தில் மிக வெப்பமான நாட்களையும் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். ''வேனிற் காலத்து மாதமிரண்டனுள் நடுவு என்னும் நாளிருபது'' என்று கூறியுள்ளார். 'நடுநின்று காய்தல்' என்ற அகநானூற்று வரிக்குக் கூறிய விளக்கம் நுட்பமானது. இந்த இருபது நாட்களை ஒட்டியே இப்போது 'கத்தரி' என்றழைக்கப்படும் நாட்கள் இருக்கவேண்டும். இந்த நாட்களில் சிள்வீடு மிகுந்த ஓசையை விடுவதைக் கூர்ந்து கவனித்து மதுரைக் காஞ்சிப் புலவர் என்ற அகநானூற்றுப் புலவர் பாடியுள்ளதைப் போற்ருமலிருக்க முடியாது. சிள்வீடு ஓசையிடுவது திருப்பித் திருப்பி ஒரே வகையாக இருப்பதால் 'கறங்கும்' (manotonous, repetitive) என்று அகநானூற்றிலும் நற்றிணை யிலும் கூறப்பட்டுள்ளது. தேர்மணிபோல வற்றல் மரத்திலிருந்து சிள்வீடு ஓசையிட்டதாக அகநானூறு (145) கூறியுள்ளது. உமணர்களின் பொதிமாடுகளின் கழுத்தில் தொங்கும் மணிகள்

ஓசையிடுவதுபோலப் பலவாகச் சேர்ந்து வற்றல் மரத்தில் பொருந்திய சிள்வீடு ஓசையிடும் என்று இன்னொரு அகநானூற்றுப் பாட்டு (அகம் 303) கூறுகின்றது. தேர்மணியும் மாட்டின் கழுத்து மணியும் விட்டு விட்டு ஒலிக்கும். அதுபோன்றே விட்டுவிட்டுச் சிள்வீடு ஓசையிடுவது கூறப்பட்டுள்ளது. வறண்ட மரத்தில் சிள்வீடு பொருந்தி ஓசையிடுவதும் உண்மைச் செய்தியாகும். இந்தப் பூச்சி பலவாகச் சேர்ந்து ஓசையிடுவதும் அறிவியலார் கண்டதாகும்.

''அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம் பைதற்ற புலங்கெடு காலையும்''　—பதிற்றுப்பத்து. 23

''வான வரம்ப னென்ப கானத்துக்
கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்''　—பதிற்றுப்பத்து 58

பதிற்றுப்பத்தில் இருபாடல்களில் சிள்வீடு என்ற பூச்சியைச் சிதடி என்ற பெயரால் அழைத்திருப்பதைக் காணலாம். இலையில்லாமல் உலர்ந்த தலையினை உடைய உன்ன மரத்தின் கவட்டுக்கிளைகளில் பொருந்தியிருந்து சிள்வீடு என்னும் வண்டுகள் ஒலிக்கும், பெரிய வற்கடம் மிக்கு, நிலம் பசுமையற்று வயல்கள் உலர்ந்து கெட்ட காலம் என்று பதிற்றுப்பத்து கூறியுள்ளது. பெரிய வறட்சிக் காலத்தில் சிள்வீடு ஓசையிட்டதாகக் கூறியது அரிய செய்தியாகும். காட்டில் வேல மரத்தின் பொரியுள்ள அடி மரத்தில் பொருந்திச் சிள்வீடு இசையுடன் கறங்குவதால் சிறிய இலை உடைய புல்லிய வேல மரம் பெரியதாகத் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது. வேல மரத்தைப் பெரியதாகப் பார்த்தற்குக் காரணம் அதன் அடி மரத்தில் பொருந்திய சிள்வீடு பெரிய ஆரவாரத்தையுடைய ஒலியை எழுப்பினதால் என்பது புலப்படும். சிள்வீடு என்ற வண்டு ஓமை, உன்னம், வேலம் ஆகிய மரங்களில் பொருந்தி ஓசையிட்டதாகக் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும். உன்னத்தின் கவட்டிலும் வேலத்தின் அடிமரத்திலும் சிள்வீடு பொருந்தியிருந்ததைக் கண்டு கூறிய சங்கப் புலவர்களின் இயற்கை அறிவு (Nature Study) போற்றத்தக்கதாகும். திணைமாலை நூற்றைம்பது என்ற தொகை நூலிலும் சிதடி என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

''செல்பவோ சிந்தனையும் மாகாதா னெஞ்செரியும்
வெல்பவோ சென்றார் வினைமுடிய—நல்லாய்
இதடி கரையுங்கல் மாபோலத் தோன்றிச்
சிதடி கரையுந் திரிந்து.''　—தி. மா. நூ. 83

காட்டெருமைகள் மேயும் காட்டில் சிள்வண்டுகள் ஓசையிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற்கால நூல்களிலும் சிள்வீடு கூறப்பட்டுள்ளது,

> ''நெல்வி மல்கி கல்லுடைப்பப் புல்லிலை யார்ந்து—அதர்வாய்ச்
> சில்லி சில்லென் றெல்லருத சிங்கவேள் குன்றமே''
>
> —பெரியதிருமொழி. 8 - 9

> ''சிறுபுன் சில்லி நெடுவிளி யானு
> மரம்பயில் கானத்து பரற்புறங் கண்ட
> விடியா நெடுநெறிச் செல்லாப் புடையது
> முல்லை வகுந்திற் போகிப் புல்லருந்தி''
>
> —ஆசிரியமாலை (1242)

பிற்கால நூல்களில் சிள்வீடு என்ற பூச்சி 'சில்லி' என்றழைக்கப் பட்டதைக் கவனிக்க வேண்டும். ஆந்திர நாட்டில் வைணவரின் திருக்கோயிலையுடைய குன்றமான சிம்மாச்சலத்தில் சிள்வீடு 'சில்' என்று ஒல் அருது ஓசையிட்டதாகப் பெரிய திருமொழி கூறுவது அரிய செய்தியாகும். 'ஒல் அருது' என்பது ஓய்வே இல்லாது (monotonous) ஓசையிடுவதைக் குறிக்கும். நெல்லி மரம் மல்கிக் 'கல் உடைப்ப' இருந்த வழி பாலைப்பாங்கான வழியாகும். இந்த வழியில் சென்று சிம்மாச்சலத்தை அடையலாம். சிம்மாச்சலக் காட்டில் சிள்வீடு இடையருது ஓசையிடுகின்றது. சிம்மாச்சலக் குன்றில் உள்ளகாட்டில் சிள்வண்டு ஓசையிட்டதை நானே நேரில் கண்டு கேட்டுள்ளேன்.

இந்தக்காட்டில் செண்பகப்பூ நிறையக் கிடைக்கின்றது. அதைத் தட்டில் வைத்து விற்கின்றனர். நான் ஐந்தாண்டுகளுக்குமுன் சென்றபோது ஒரு தமிழ்நாட்டு ஐயங்கார், பார்ப்பன மரபினர் திருப்பாவை, பெரிய திருமொழி முதலிய நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்களை ஓதிக் கொண்டிருந்தார். நான் அவரை வினவியபோது அவருக்குத் தமிழ்மொழி தெரியவில்லை என்பது தெரிந்தது. தெலுங்கு மொழி எழுத்தில் தமிழ்ப் பாட்டை எழுதி ஓதினுர். இடைக் காலத்தில் இந்த வைணவக் கோயிலில் புகுந்த தமிழ் உபயவேதம் இன்றும் இருப்பது வியப்புக்குரியதே. ஆசிரிய மாலையில் பொருத்தமாகச் 'சிறுபுன் சில்லி' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. சிள்வீடு சிறிய புல்லிய பூச்சிதான். ஆனுல், அது விடும் பெரிய ஓசையால் பெரிய தன்மை பெறுகின்றது. சிறிய புல்லிய சில்லி நெடுவிளியை ஆனுது செய்வதாகக் கூறியது அரிய செய்தியாகும். நெடும் விளியை இடையருது செய்வதாகக் கூறியது இயற்கைச் செய்தியாகும். (தொடரும்)

———

அந்த உணர்வு எங்கே?-3

[புலவர் இரா. இளங்குமரன்]

'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்னும் பொருள் கண்டனர் முன்னேயோர். அக் காட்சி, தேன், பால், அமுது என்றும், 'இணையிலா இன்ப வீடு' என்றும் அதற்குப் பொருள் விரித்துக் கொஞ்சி மகிழப் புலவோரைத் தூண்டியது. 'தமிழர்' என்பதற்கும், 'இனியர்' என்னும் பொருள் கிளர்ந்தது. ''தமிழ் தழிய சாயலவர்'' என விளக்கினர் [1]திருத்தக்கதேவர். ''வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரை''யைக் காட்டினர் [2]கம்பர்!

தமிழர் இனியர் என்பதற்குச் சான்று என்ன? அவர்தம் சாயலே—பண்பாடே—நாகரிகமே—வாழ்வே—இனியர் என்பதை நிறுவும் சான்று! தமிழர் இனியர் என்பதற்கு வாழ்வுச் சான்று மல்குநிலையில்தான், பெருமையுண்டு; பேறும் உண்டு! இன்றேல், போலிப் புகழும், பொருந்தா உரையுமாய்ப் போயொழியும்!

''கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு''

இது [3]வள்ளுவர் கண்ட தமிழினியர் தகைமை;

''வயல்வரப்பினுள் அமைந்த வளையுள், நந்தும் அலவனும் உள; வன்மையாய் அடியிட்டு நடந்தால், அவை கலக்கமுற்று அஞ்சிப் பிரிந்து அகலும்; மெல்ல நடக்க'' என்பதும்,

''களையாகப் பறித்து வரப்பிலே போடப்பெற்ற, குவளை அல்லிக் கொடிகளில் உள்ள பூக்களின்மேல் அடிவைக்காமல் செல்க; ஆங்குள்ள தேனை அருந்தப் புகுந்த வண்டுகள் அல்லல் எய்தக்கூடும்'' என்பதும் [4]இளங்கோவடிகள் கண்ட தமிழினியர் நெஞ்சம்.

ஓடும் தேரில் மணி ஒலிக்கிறது. அதனைக் கேட்டுத் துணையொடு வதியும் வண்டு அஞ்சுகிறது. அதற்கு மனம் இரங்கி மணிநா ஒலிசெய்யாவாறு இறுக்கிக் கட்டிக்கொண்டு

---

1. சீவக. 2026. 2. கிட். 28. 3. திருக். 984.
4. சிலம்பு 10 : 86-93.

தேரைச் செலுத்துகிருன் ஒரு தலைமகன். [1]இது குறுங்குடி மருதனூர் குறிக்கும் தமிழினியர் உள்ளம்.

ஆடு மாடுகள் தம் உடலில் ஏற்பட்ட ஊறலை உராய்ந்து அகற்றிக்கொள்ள வேண்டுமே! மொழியறியா அவை என் செய்யும்?'' என ஏங்குகிறது, இளகிய தமிழ் நெஞ்சம்! 'ஆவுறிஞ்சு குற்றி'யை நடைவழியில் நட்டுவைக்கிறது!

இத் தமிழினிய நெஞ்சங்கள் என்ன வினவுகின்றன? ''அந்த உணர்வு எங்கே?'' என்று வினவுகின்றன இந்நாளில்!

அந்தத் தமிழினியர் வாழ்ந்த நாளிலேயே, ''கொள்ளும் பொருள் இல்லை எனினும் துள்ளுவதைக் கண்டு களிப்பதற்காகவே, கொல்லும் கொடியரும் இருந்த குறிப்பும் இல்லையோ?'' எனின், [2] ''உண்டு'' என்பதே விடையாம்! ஆனுல், அக் கொடியனைக், ''கல்லாக்கயவன்'' என்றும், ''கல்லாக்களிமகன்'' என்றும் ''கல்லினும் வலிய நெஞ்சக் கண்ணிலி'' என்றும் இடித்துரைக்கும் சான்ரோர் இருந்தனரே இன்று உளரோ அத்தகையர்? உண்மை உருக்க நெஞ்சர், உருக்கன்ன திண்ணியராய் உறுதி உரைக்கும் நிலையும் உண்டோ இந்நாளில்?

சாதி, சமயம், கட்சி, இனம், தன்னலம் இன்னவற்ருல் என்னென்ன கயமைகளையெல்லாம் கண்டும் காணுமல் போவதும் அவற்றை அறமே என்று பறையறைவதும், கயவரைக் கனிவோடு அரவணைத்துக் கட்டியங்கூறுவதும் நாட்டில் நடைமுறையாக உள்ளன! ''நான் எது செய்தாலும் சரியானது; செம்மையானது; நீ எது செய்தாலும் சரியற்றது; கொடுமையானது'' என்றும், ''அறத்தைத்தான் கூறவேண்டும்! ஆனுல் அது என் பக்கம் இருப்பதாகவே கூறவேண்டும் என்றும், ஓரஞ் சொல்வாரும், அவரை ஒட்டியிருப்பாரும் உவகை கொள்வாரும் கூட்டுறவாக நாட்டைக் குலைக்கத் துணிந்துள்ள போழ்திலே தமிழினியர் உள்ளம் நாணிக் குனியாமல் இருக்குமா? ''அந்த உணர்வு எங்கே?'' என்று வினவாமல் இருக்குமா?

வஞ்சக வலைவிரிப்பையே வாழ்வாகக் கொண்டவர்கள் போகட்டும்; குணக்கேட்டையே கண்கண்ட கடவுளாகக் கொண்டு குலவுவார்கள் ஒழியட்டும்; கொலைசெய்து புதைத்த குழியின்மேல் கொடிமுல்லை நட்டு மணங்கொள்ளும் மணவாளர்கள் நீங்கட்டும்.

---

1. அகம். 4. 2. கலி. 4.

தமிழ் வாழ்வுடைய தமிழர்க்கேனும் தகவு வேண்டாவா? அத் தகவமைந்த தமிழினியரை வாழ்த்தி வணங்கல் வேண்டாவா?

ஒரு தலைவன்; வீரமிக்கவன்; அதே பொழுதில் ஈரமும் மிக்கவன்; வீரத்தினை எங்கு எப்படிக் காட்டவேண்டும் என்பதும் அறிவான்; ஈரத்தினை எங்கு எப்படிக் காட்ட வேண்டும் என்பதும் அறிவான். ஆதலால், அவனை வீரச் சுற்றம் ஒருபால் சூழ்ந் திருக்கும்; ஈரச் சுற்றமும் ஒருபால் இயைந்திருக்கும்! அச் சுற்றங் களுள் பிணக்கம் உண்டாக அவன் நடந்துகொண்டது இல்லை. அவர்கள் பிணங்கியதும் இல்லை. அவன் தேர்ச்சித் திறம் அவ்வாறு பாலமாக இணைத்தது.

அவன் பெருநிலம் முழுதாளும் வேந்தனும் அல்லன்; குறு நிலங் காக்கும் கொற்றவனும் அல்லன்; சீறூர்த்தலைவனே அவன்! ஆனால் வேந்தர்களும் விரும்பும் ஏந்து புகழாளனாக இலங்கினான். பொய்யாச் செந்நாவுடைய புலவர் பெருமக்கள் புகழுக்கு இலக்காகிச் சிறந்தான்; **பிட்டங்கொற்றன்** என்பது அவன் பெயர்.

பிட்டங்கொற்றனுக்கு இப் பெருமை எப்படி ஆயது? "**வாழ் வோர் வாழ வாழ்பவன்**" அவன்! ஆதலால் புகழின் கொள்கலம் ஆனான்.

உலகில் எவர் இடரின்றி வாழவேண்டும்? வாழத்தக்க நல்லோர் அல்லல் எதுவும் இன்றி வாழவேண்டும்! அவர் நல் வாழ்வு உலகின் நல்வாழ்வு ஆதலால் அவர் நெடிது வாழ்தற்கு அரண்போல் அமைந்து காக்கவல்லார் கட்டாயம் வேண்டும்! பிறர்க்கென வாழும் பெருநிலையர் தம்மைக் காத்துக்கொள்ளத் தாம் எண்ணார்! அத்தகையர்க்கு, "நானே காவலும் துணையும் கனிவும் கடனுமாய் நின்று காத்தல் வேண்டும்" என்னும் கடப் பாட்டாளன் வேண்டும். அவ்வாறு காப்பவனே வாழ்வோர் வாழ வாழ்பவன் ஆவான்! அவ்வாறு வாழ்பவன் '**பிட்டன்**' என்றால், அவன் மட்டில்லாப் புகழை மதிப்பிடக் கூடுமோ?

புகழாளன் பிட்டனைப் பாடிய புலவர் பெருமக்களுள் ஒருவர் **கண்ணனார்**; எழில்மிக்க '**கருநீலக்கண்ணர்**' அவர்; **காவிரிப்பூம்பட்டி னத்தார்**; முடியுடைய மூவேந்தர் அன்பையும் ஒருபடியாகப் பெற்ற பெருமையர்! அவர் முழுப்பெயர் '**காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்**' என்பது.

பிட்டன் பெரும்புகழ் கேட்டு, அவனை அண்மினர் கண்ணனார். தாம் கேட்டறிந்த புகழ் அனைத்தும் உண்மையே என்பதை உணர்ந்தார். தமக்கு அள்ளி வழங்கிய வள்ளன்மையில் ஒன்றினார்; அவ் வொன்றுதல் தந்நலத்தால் ஆயதன்று; அவர்க்கு எப்படி அள்ளி அள்ளி வழங்கினானோ அவ்வாறே பிறர்க்கும் வழங்கினான்! மிகுத்தும் வழங்கினான்! இப் 'பெருந்தகை பிறர்க்கும் அன்னன்!' என்பதை உணர்ந்த பெருமிதத்தில் ஓங்கினார்.

"இப்பொழுதும் தருகிறான்; இன்னும் சில நாள்கள் சென்று வரினும் தருவான்; அதற்குப் பின் வரினும் முன்னே தந்தேன் என்னாது பின்னும் தருவான்! "போன முறை எத்துணைக் கனிகளைத் தந்தேன்" என்று கருதாமல் பின்னும் பின்னும் பருவந்தோறும் தரும் கனிமரம்போலத் தருவான்! கனிமரத்திற்குக் கூடப் பருவம் உண்டு; பருவத்தால் அன்றிப் பழாது; இவனோ பருவம் அன்றியும் பழுத்துக் குலுங்கும் பண்பாளன்! 'வருக'வென வருந்தியழைத்து "வேண்டுவார் வேண்டுவ' வெல்லாம் நல்கும் விழுப்புகழ்ப்பழவோன்! இவன் நெடிது வாழவேண்டும்; வாழ்வோர் வாழ இவன் வாழ வேண்டும். இவன் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் வெற்றியாய் முடியவேண்டும்." என்று எண்ணி எண்ணி மகிழ்கிறார் கண்ணனார்!

"எம் தந்தை போல்வானாகிய இவனை நான் வாழ்த்துதல் வேண்டும்; எப்படி வாழ்த்துவேன்" எனத் திகைத்தார் கண்ணனார். ஒரு நொடியில் ஒரு மின்னல் ஒளிக்கீற்று உள்ளொளிபோல் பளிச்சிட்டது!

[1]"கொல்லன் தன் கூடத்தைத் தூக்கி ஓங்கி ஓங்கி அறைகிறானே 'உலைக்கல்' ஆகிய பட்டறையில்! அப் பட்டறை அசைகிறதா? அலுங்குகிறதா? நெளிகிறதா? நிலை சாய்கிறதா? அவ்வுலைக்கல் போன்றவன் பிட்டன்; அவன் பகைவர்களோ 'கொல்லுலைக் கூடம்' (சம்மட்டி) போன்றவர்கள்! அவனை என் செய்ய மாட்டுவர்! இப்படி எத்துணைப் பேரைக் கண்டவன் பிட்டன்" என்று 'மருத்துவன் தாமோதரனார்' என்பார் பிட்டனைப் பாடிய செய்தியை நினைத்தார்!

[2]"கோசர் என்பார் ஒரு குடியினர்; வேந்தர் மரபினர்; அவர் படைப் பயிற்சியில் சிறந்தவர். அப் பயிற்சிக்காக அகன்ற பெரிய முன் முருக்கை மரத்தைக் கம்பமாக நட்டு, அதனை இலக்காகக்

1. புறம். 170. 2. புறம். 169.

கொண்டு வேல் ஏவியும், அம்பு எய்தும் பயிற்சி செய்வர்; அவ் வேலுக்கும் அம்புக்கும் பிற பிற படைக்கலங்களுக்கும் அடைக்கலம் தந்து தாங்கும் அம் மரம் அசைவது இல்லை! அம் மரம் போலல்லவோ பகைவர் படைக்கலங்களெல்லாம் தாங்கிய விழுப் புண்ணுளியாக விளங்குகிறான் இப் பிட்டன்'' என்று வியந்தார்!

பிட்டன் விழுப்புண் படட்டும்; நேர்த்தாக்குதலில் நெஞ்ச கத்து இடமில்லையாய்ப் படைகள் துளைப்பினும் துளைக்கட்டும்! ஆனால், [1]''அவன் உள்ளடியில் முள்ளும் நோவுமாறு உறுமல் இருக் கட்டும்!'' என்று பெருமூச்சு விட்டார்.

பிறருக்காக வாழ்பவனுக்கு அவன் அறியாமல்—மறைமுக மாக—ஒரு முள்ளும் கூட—அதுவும் புறத்தடியில் அல்லாமல் உள்ள டியில் கூட—தைத்தல்—நோவுமாறு தைத்தல்—கூடாது என்னும் கொள்கைச் சிறப்பு என்னே! என்னே! இக் கொள்கையில் ஊன்றியிருந்தால் 'முத்த நாதனியமும்' 'கோட்சேயியமும்' இன்ன பிற இயங்களும் நாட்டில் தோன்றியிருக்குமா? ''மனிதர் நோக மனிதர் பார்க்கும்'' வழக்கமும் வாழ்வும் தலைவிரித்தாடுமா?

'எந்தை உள்ளடி, முள்ளும் நோவ உறற்க'' என்று கனிவுடன் வேண்டும் காரிக்கண்ணரின் 'அந்த உணர்வு எங்கே? எங்கே?'

———

அன்புத் தளை

கடவுள் மனிதனுக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே அரும்பொருள் அன்பு. அது நெஞ்சுடன் நெஞ்சை, உள்ளத் துடன் உள்ளத்தை, உயிருடன் உயிரைப் பிணைக்கும் ஒரு வெள்ளித் தளை.

—சர் வால்டர் ஸ்காட்

1. புறம். 171

பெருப்பெயர் பெற்ற பெருங் கழகம் பெருவாழ்வு பெறுக!

[பேராசிரியை கிருட்டிண சஞ்சீவி,
டாக்டர் ந. சஞ்சீவி]

(முன் இதழ் ௩௯௯ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் தொடராகக் கழகப்பெயரில் நிலைபெற்றிருப்பது நூற்பதிப்பு என்பதாகும். மனிதகுலத்தின் மாட்சியாய் மிளிர்வது நுண்ணறிவிற்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் விளங்குவது நூல் அறிவே ஆகும்.

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்" (குறள் 410)

அறிவுக்கு அடிப்படை இழையாய் இலங்கும் இந்தநூலை அச்சில் பதிப்பிக்கும் அருங்கலை இருபதாம் நூற்றாண்டின் பெருங்கலையாகும். இந்த நூற்றாண்டுகளில் ஏற்பட்டுவரும் மிகப்பெரும் 'வெடிப்புகள்' இரண்டு. ஒன்று: மக்கள் பெருக்க வெடிப்பு (population explosion) இரண்டு: அறிவுப் பெருக்க வெடிப்பு (knowledge explosion). அகமுகமாக வெடிக்கும் வெடிப்பினும் புறமுகமாக வெடிக்கும் வெடிப்பு ஆபத்துக்களை அதிகமாக உண்டாக்கும் அல்லவா? அவ்வகையில் மேற்கண்ட இரு வெடிப்புகளும் இன்றைய உலகில் ஏற்படுத்திவரும் கொடுமைகளை நாம் நன்கு அறிவோம். ஆனால், இன்றைய உலகம் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதலில் காட்டும் காட்டாற்று வேகத்திலேயே அது தன் அறிவை மட்டுப்படுத்தும் நெறிப்படுத்தும் அறிவைப் பெறவில்லை என்பது கண்கூடு. நெருக்கடி நேரத்தும் நேர்மை–நீர்மை குன்றாமையே சீர்மை. இத்தகைய சிறுமையை– "அறிவினால் ஆகுவது உண்டோ?" என்ற வினாவுக்கான விடையை வள்ளுவரைப் போற்றும் வாய்வழியில் மட்டுமல்லாமல் வாழ்க்கை வழியிலும் டட்டறிந்து போற்றும் பண்பு இந்த உலகத்திற்கு வருவதற்குள் இருபதாம் நூற்றாண்டு முடிந்து போதல் இயற்கை! ஆயினும் எந்த ஒரு நூற்றாண்டிலேனும் இந்த அறிவைப் பெற்ற நிலையில்தான் இந்த உலகம் பாரதி பாடியது போல 'இந்த ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்?' என்று

கேட்கும் வீற்றினையும் பேச்சினையும் பெறும். அதுவரை அறிவுப் பெருக்கம் ஆழ்ந்து கொண்டே - ஆழ்வதினும் அகன்று கொண்டே போகும். அந்த இயல்பின் அடையாளமாகத் திகழ்வதே நூல் பதிப்பு உலகம் புகழும் தத்துவமேதை திரு ஜே. கிருட்டின மூர்த்தி திரும்பத் திரும்ப உரைப்பது போல பதிப்பு இல்லா மனமே பாதிப்பு இல்லா மனம் என்பதை உலகம் உணர காலம் நூற்றாண்டுகள் கழியும். ஆம். காலங்கடந்த நிலையில் - இல்லை. காலம் காலமான நிலையில் விளங்குவதே அப்பேருண்மை. அப் பேருண்மைப் பேரின்பத்தைப் பெரும்பாலோர் கலைவழி பெறுதற்கு வளையப்பட்டதே புத்தகப் பதிப்பு. முள்ளை முள்ளால் எடுத்ததைப் போல அழுக்கை அழுக்கால் அகற்றல் போல-அறியாமையை அறி தொறும் அறிதொறும் அறியும் அறியாமையை அறியாமையாலேயே அரிதல் வேண்டும். அவ்வகையில் அருந்தமிழ் நூல்களையும் அவற் றின் பெருமைகளையும் அனைத்துலகிற்கும் அறிவிக்கும் ஆங்கில நூல்களையும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் அருமை பெருமையுடன் வெளியிட்டு வருதல் அனைவர் நன்றியையும் பெறுதற்கு உரியதாகும். இதுகாறும் 1750 நூல்களுக்கு மேல் கழகம் வெளியிட்டிருத்தலை எண்ணும் போது தமிழ்நாட்டில் அமைந்த அரசுகளும் பல்கலைக்கழகங்களும் நாணித் தலைகுனிந்து எவ்வித அரசியல் பேரம்-சோரம்-இல்லா நிலையிலேயே தாமரைத்திரு வ. சுப்பையா அவர்கட்குத் தாமே முன்வந்து-மனமுவந்து டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தல் நன்றிசான்ற நடுநிலைக் கடமையாகும். சரியாகச் சொன்னால்— சரிவில்லாமல் சொன்னால்—தமிழ்நாட்டின் “ஆக்ஸ்போர்டு அகம்” (Oxford house) என விளங்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செயல் செம்மல் திரு வ. சுப்பையா அவர்கட்கு ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகமே டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தல் அப் பல்கலைக் கழகத்திற்கே பெருமை சேர்த்துக் கொள்வதாகும்.

இனி, கழகம் என்ற சொல்லைக் கவனிப்போம். இச் சொல் பழந்தமிழ்த் தொகைநூல்களுள் காலத்தால் பிற்பட்டதாகிய கலித் தொகை ஒன்றிலேயே—ஓரிடத்திலேயே ஆட்சிபெற்றுள்ளது. (136:3). இங்கும் கழகம் என்பது “சூதுபொருகின்ற இடம்” என்ற பொருளிலேயே வந்துள்ளது. தமிழிலக்கிய வரலாற்று ஆய்வில் ஈடுபட்டோர் தொகை நூற்காலத்தையே முற்பட்ட காலம் பிற்பட்ட காலம் என்று இரண்டாகப் பிரித்தல் இயலும் என்பதை அறிவர். அந்தப் பிற்பட்ட கடைச்சங்க இறுதிக் காலத்தைச் சார்ந்த நூல்களாகவே திருக்குறள், கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகியன இருத்தல் கூடும் என்பதையும்

அறிஞர் உணர்வர். இக் கருத்துக்கு அரண் செய்வதுபோல திருக்குறளில் "சூது" பற்றிய அதிகாரத்திலேயே அடுத்தடுத்து வரும் இரு குறட்பாக்களில் 'கழகம்' வருகிறது (குறள்935, 937) அக்குறள்கள் வருமாறு :

"கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்." (935)

"பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்." (937)

திருக்குறளில் கழகம் என்ற சொல் நற்பொருளில் ஓரிடத்தும் வரவில்லை என்பதே ஈண்டு இன்றியமையாததாய்க் கருதத் தக்கது.

அடுத்து, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திரிகடுகம், ஆசாரக்கோவை ஆகிய இருநூல்களில் மட்டுமே முன்னதில் இருமுறையும் பின்னதில் ஒரு முறையுமாகக் 'கழகம்' காட்சி யளிக்கின்றது. இக் காட்சியிலும் சூதுக்கழகத்தைப் பார்க்க முடிகிறதே தவிர வாதுக்கழகத்தைப் பார்க்க முடியவில்லை!

மேற்கண்ட குறிப்புகளால் பல்லவர் காலத் தோற்றம்வரை கழகம் என்பது சூதுப்பொருளிலேயே சுழன்றுள்ளது என்பது விளங்குகிறது. இதன்பின்தான் கழகம் நற்பொருளுக்கும் உரிய தாய் மேம்பாடு பெற்றுள்ளது. இதற்குப் பெருஞ்சான்றாய் விளங்குவது கி. பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வர் எனக் கருதப்படும் திவாகரர் இயற்றிய சேந்தன் திவாக ரத்தில் உள்ளது. பின்வரும் நூற்பா:

"சொல்லால் தீய்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த விடமும்
மல்லும் சூதும் படையு மற்றும்
கல்விபயில் களமும் கழகம் ஆகும்."

சொற்பொருள்கள் மாற்றம் பெற்ற ஒரு மாறுதல் காலத்தைச் (transitional period) சார்ந்தது என்பதைக் கழகம் பற்றிய இந் நூற்பா கண்ணாடி எனக்காட்டும். திவாகரத்தை அடியொற்றித் திவ்வியப் பிரபந்தமும் அதை அடியொற்றிக் கம்பராமாயணமும் கழகத்திற்கு நற்பொருள் சேர்த்துள்ளன. 'கந்தனை அனையவர் கலைதெரி கழகம்' என்பது கம்பர் வாக்கு. ஆம். கழகம் என்ற சொல்லுக்குக் கல்விப்பொருளும் கடவுட்பொருளும் சேர்த்தது

சமயகாலம்—பக்திகாலம் என்பதை நன்றியோடு நாம் நினைக்கக் கடமைப்பட்டுள்ளோம். "கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்த" சிறப்பைப் பரஞ்சோதியார் பகர்வார். சமணர்களால் சூதுக்கு உரிய இடமாகக் கருதப்பட்ட கழகம், அவர்கள் அற வுரைகளாகிய அறைபட்டு எலும்பாகிக் கிடந்த நிலையில் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய' அருட்செல்வர்களின் ஆற்றலால் கழகமும் கடவுட்டன்மை எய்தியது போலும்! வரலாற்று அடிப் படையிலான சொற்பொருளாய்வால் சுடர்விடும் உண்மைகளுள் இதுவும் ஒன்று எனலாம். எனவே, மடைமாற்றம்—பொருள் மாற்றம் பெற்ற இச் சொல் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்ற பெரும் பெயரில் சுட்டுச் சொல்லாய் முற்றியிருப்பதும் பொருத்தமே. ஈண்டு அரசியல் கழகங்களெல்லாம் அப் பெயர்ச் சொல்லைப் போற்றுதற்கு முன்பு—1920ஆம் ஆண்டிலேயே 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' அப் பெயரைப் போற்றியிருப்பது ஆழ்ந்து கருதத்தக்கது. 1920 ஆம் ஆண்டில் பின்னாளில் திராவிடர்கழகம் என்ற பேரமைப்பைத் தோற்றுவித்த தந்தை பெரியாரும் காங்கிரஸ் கட்டுக்குள்ளேயே இருந்தார் என்பதும், 1945ஆம் ஆண்டிலேயே சேலத்தில் திராவிடர் கழகம் என்ற பெயர் பெற்ற பேரமைப்பு உருவாகியது என்பதும் நினைவுகூர்தற்குரியன. உணர்ச்சி அளவில்—இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு கண்ட நிலையிலும், பிற சில வகைகளிலும் தமிழ் உணர்ச்சிக்குத் தனியாக்கம் தேடிய தி. மு. க. ஆட்சி தோன்றுவதற்குப் பல்லாண்டுகட்கு முன்பேயே—குறைந்தது கால் நூற்றாண்டிற்கு முன்பேயே 'கழகம்' என்ற சொல்லை மதிக்கத் தக்கதாக ஆக்கிய அரிய பெரியதோர் அமைப்பு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமே ஆகும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெறும் புத்தக வெளியீட்டு—விற்பனை நிலையம் மட்டுமன்று. அதன் வரலாற்றைப் பார்க்கும் போது அரசியல் கழகங்களுக்கு எல்லாம் முதுகெலும் பான தமிழ்ப் பாதுகாப்புக் கழகமாகவும் அது விளங்கி வந்துள்ளது என்பது தெளிவாகும். கட்சி அரசியல் சார்பற்ற நிலையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் போன்ற ஒருசிலரே கடந்த கால் நூற்றாண்டுக்காலத்தில் தமிழ்ப்பணி புரிந்து தனிப் பெரும் புகழும் பெறமுடிந்தது. முத்தமிழ்க்காவலர் போன்றவர்கள் காட்டிய அளவிற்குக்கூடக் கட்சித் தொடர்பு காட்டாமல் - இல்லா மல்—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பலவகையான தமிழ்ப் பணிகளைப் புரிந்து வந்திருப்பது நன்றியுடைய தமிழ்மக்களால் வியந்து போற்றப்படுதற்குரியது. சிறப்பாக இலக்கிய மாநாடுகள் நடத்தியும் கண்காட்சிகள் பொருட்காட்சிகள் நிறுவியும் இவற்

றினும் சிறப்பாகச் 'செந்தமிழ்ச் செல்வி' என்ற திங்கள் இதழைக் கடந்த ஐம்பத்து நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தியும் வருவது கழகத்தை ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாகக் கருதச் செய்வதாகும். எந்த நூலகத்தினும் மிகச்சிறப்பாகப் பயன்படும் வகையில் அண்மையில் திரு வ. சுப்பையா அவர்கள் மறை மலையடிகள் நூல்நிலையத்தை உருவாக்கியிருப்பது மேற்குறித்த உண்மைக்கு மேலும் மேலரண் செய்வதாகும்.

'செந்தமிழ்ச் செல்வி'யைத் தனித்தமிழ்த் திங்கள் வெளி யீடாகக் கழகம் தொடர்ந்து வெளியிட்டுவருவது தமிழாராய்ச் சியும் தமிழக வரலாறும் செய்த தவமாகும். இவ்விதழ்களை மட்டுமே ஆராய்ந்து ஒருவர் பிஎச். டி. பட்டம் பெறுதல் எதிர் பார்க்கத்தக்கதும் இன்றியமையாக் கடமை ஆவதுமாகும்.

'செந்தமிழ்ச் செல்வி' இதழைச் சிலம்பு—பரல் என்று கணக்கீடு செய்திருப்பது வீரக் கண்ணகியை நினைவூட்டுவதும் ஆகும். அதனினும் சிறப்பாகவும், குறிப்பாகவும் அக் கண்ணகி காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் உரிமை—ஒருமை உணர்வையும் உணர்த்துவது ஆகும்.

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி, இயம்பி இயம்பி, இயற்றி இயற்றி ஒருமணிவிழாக் காலம் தமிழ்ப் பணியாற்றியுள்ள கழகமும் அக் கழகத்தைப் போற்றி வளர்க்கும் திரு வ. சுப்பையா (தமிழ் முருகன் சுப்பிரமணியம் என்ற பெயரின் திரிபுதான் சுப்பையா) அவர்களின் குடும்பமும் பொருநை மணலினும் பலவாகத் தமிழ்த் தொண்டுபுரிந்து—வாழ்நாள் பெற்று—வையகப் புகழ் பெறுவனவாகுக!

நிலையாமை

''நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்'' 334

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'' 336

''ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.'' 337

திருக்குறள்

பண்டைத் தமிழ்ச் சிறுவர் விளையாட்டுக்கள்

[இரா. பாலசுப்பிரமணியம், பி. எஸ்ஸி., எம். ஏ., எம்பி.ஃல்.
ஆராய்ச்சியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.]

விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்று கூறலாம். ஏனெனில், "விளையாட்டு வாழ்க்கையோடு ஒன்றியதொன்றாகும். விளையாட்டு வேறு வாழ்க்கை வேறு என்று எப்பொழுதுமே பாகுபடுத்த முடியாது"[1] மேலும், விளையாட்டு அவ்வக்கால வாழ்க்கைச் சூழல்களுக்குத் தக்கவாறுதான் அமையும். பண்டைத் தமிழ்ச் சிறுவர் விளையாட்டுக்கள் அவர்களின் வாழ்க்கைப் பயிற்சிக்கு எத்துணை அளவில் உதவின என்பதனை இக் கட்டுரையில் காண்போம்.

பண்டைத் தமிழ் மக்களுக்குக் காதலும் போருந்தான் இரண்டு கண்களாக விளங்கி வந்துள்ளன. காதலில் களவு நெறி கண்டு கற்புநெறிக்குச் சென்றனர். கற்புநெறியில் செம்மைபட வாழ்தலே அவர்களின் தலையாய கடமையாயிருந்தது. வீரத்தை வெளிப்படுத்துவதற்கு மட்டும் போர் அவசியமாயிருக்கவில்லை. பகைவர்களிடமிருந்து தங்கள் நாட்டினைக் காப்பாற்றிக் கொள்ளவும் போர்தான் உதவியாயிருந்தது. இவ் விரண்டு இயல்புகளுமே பண்டைச் சிறுவர் விளையாட்டில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

தேர் விளையாட்டு:

தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை யென்று போர் செய்வதற்குப் பலவகைப் படைகள் உண்டு. தேரை இப்பொழுது விளையாட்டாக இழுத்துப் பழகும் சிறுவன்தான் பின்னர்ப் போர்க்களத்தில் தேரைச் செலுத்தும் வீரனாக ஆவான் என்பதில் ஐயமில்லை. இதனை அக்கால மக்களும் நன்கு உணர்ந்து தான் இருந்தனர். ஆகவேதான் சிறுவர்களுக்குச் சிறுதேர் உருட்டப் பழக்கியிருந்தனர்.

---

1. ப. சபாபதி, ஒலிம்பிக்ஸ், ப. 2., அண்ணாமலைப் பல்கலைக் கழகம், முதற்பதிப்பு, 1972.

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறாஉம் இளையோர்போல"[2] (குறுந்தொகை—61)

மேற்கண்ட பாடல் வரிகளின் மூலம் சிறுகுழந்தைகள்கூடத் தேரினை வைத்து விளையாடியுள்ளனர் என்பதனை அறியலாம். "தொண்டை நாட்டுச் சிறுவர்கள் மருதநிலப்பேரூர்களில் சிறுவர் பிறரால் ஏறப்படாத சிறிய தேர்களை உருட்டி விளையாடினர் என்பதைப் பெரும்பாணாற்றுப் பாடல் (249) வரிகள் உணர்த்துகின்றன."[3]

செல்வச் சிறுவர்கள் விளையாட்டோ வேறு விதமாயிருந்தது. "சிறுவர், பெரியமணிகள் பதித்த சிறிய தேரில் இருக்கச் சேடியர் அத் தேரை இழுத்துச் சென்றனர். (கலி. 83)"[4] இதுபோல, சிறுவர் தேர் உருட்டி விளையாடிய செய்தியினை நற்றிணையிலும் (103, 324) காணலாம்.

'சிறுவர்கள் விளையாட்டு' பெரும்பாலும் 'போலச் செய்தல்' அடிப்படையிலேயே அமைந்திருக்கக் காணலாம். பெரியவர்கள் போரில் தேரைப் பயன்படுத்துவதைப் பார்த்துத் தங்களுடைய விளையாட்டுக்களிலும் தேருக்கு இடம் கொடுத்துள்ளனர். "தற்காலத்திலும்கூடக் கிராமத்தில் சிறுவர்கள் வண்டியுருட்டிச் செல்லும் விளையாட்டினைக் காணலாம். வட்டமான இரும்புவளையம், நொங்கு மட்டைகள் இவற்றையே வண்டிகளாகப் பயன்படுத்துகின்றனர்."[5] இதனை நன்கு கவனித்தால் ஓர் உண்மை புலப்படும். தற்காலத்திலுள்ள வாகனங்களைப் பார்த்தே தற்காலச் சிறுவர்கள் வண்டியுருட்டி விளையாடுகின்றனர். அஃதேபோல அக் காலத்தில் பெருவழக்காயிருந்த பெரிய தேரைப் பார்த்துச் சிறுவர்களும் பயன்படுத்தியிருக்கலாம்.

வில் அம்பு விளையாட்டு :

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து வந்த குறவர்கள் தங்கள் போர்க் கருவிகளாகவும், வேட்டையாடு கருவிகளாகவும் வில், அம்பைப்

---

2. கோ. சுப்பிரமணிய பிள்ளை, "பண்டைத் தமிழ் விளையாட்டுக்கள்," மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர், ப. 124, 1956.

3. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 578., சென்னைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1970.

4. மேற்படி, ப. 580.

5. கட்டுரையாளர் இளமைப் பிராயத்தில் அறிந்தது.

பயன்படுத்தினர். இவ்வாறு பெரியவர்கள் பயன்படுத்துவதைப் பார்த்த சிறுவர்கள் தங்கள் விளையாட்டிலும் வில் அம்பைப் பயன் படுத்தினர். "குறவச் சிறுவர்கள் வில் அம்பைப் பயன்படுத்தி விளையாடியதை நற்றிணையின் (பாடல்: 191) மூலம் அறிய முடிகிறது."[6] இக் காலத்துச் சிறுவர்களும் சிறு துப்பாக்கிகளை வைத்து விளையாடுவர். யாதெனில், இக்காலச் சூழ்நிலையில் போரிற்கும், வேட்டைக்கும் துப்பாக்கிதானே பயன்படுத்தப் படுகிறது? இதனைப் போலவே அக் காலச் சிறுவர்கள் வில்லையும், அம்பினையும் பயன்படுத்தியுள்ளனர். சிறு கிராமங்களில் வாழும் சிறுவர்கள் வில் அம்பினைப் பயன்படுத்தி விளையாடுவது பழைய பண்பாட்டின் எச்சமெனத் துணியலாம்.

மரயானை விளையாட்டு:

யானை எத்தகையது? அதன் உருவம் எப்படியிருக்கும்? அதன் தன்மை யாது? இதனைப் பற்றியெல்லாம் சிறு குழந்தைகள் உணர்ந்திருந்தால்தானே பிற்காலத்தில் யானைமீதேறிப்போய்ப் போர்க்களத்தில் பொருத இயலும்? இதனை அறிந்துதான் உண்மையான யானையுடன் பழகுவதற்குமுன் பாவை யானையைச் செய்துகொடுத்துச் சிறுவர்களை விளையாடச் சொல்லியிருந்தனர் போலும். 'சிறுவர்கள் மரயானையை வைத்து விளையாடிய செய்தியினைப் பற்றிக் கலித்தொகை (80) பேசுகிறது."[7]

ஆட்டுப்போரும், கவுதாரிப்போரும்:

போர் கொடூரத்தன்மை நிறைந்தது. இதனைச் சிறுவயதிலேயே உணர்ந்திருந்தால்தான் மனத்தில் அச்ச எண்ணம் எழாமல் இருக்கும். போரைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் களத்திற்குள் நுழைந்தால்......! ஆகவே, போரின் கொடூரத் தன்மையினைப் பார்த்துப் பழகுவதற்காகத்தான் ஆட்டுப்போரையும் கவுதாரிப்போரையும், சேவற்போரையும் பண்டைத் தமிழர் நடத்தி வந்தனர். "மீனவச் சிறுவர்கள் தங்கள் மன்றிலே ஆட்டுக் கடாய்ப்போரையும், கவுதாரிப் போரையும் கண்டுகளித்ததைப் பற்றிப் பட்டினப்பாலையால் (61-77) அறியலாம்''.[8] இஃது

---

6. "Kurava boys used to make bows and arrows with twigs and thorns" —K. K. Pillai, A Social History of the Tamils (part 1) P. 328., University of Madras, 1969.

7. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 580., சென்னைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1970.

8. மேற்படி, ப. 579.

விலங்குப் போர் விளையாட்டு எனப்படும். முந்திய விலங்குப் போர் விளையாட்டுதான் பிந்திய உண்மையான போர் விளையாட்டைப் புரிந்துகொள்வதற்கு அடித்தளமாக அமைகிறது. அதனை உணர்ந்துதான். சிறுவர்கள் விலங்குப்போர் விளையாட்டினைக் கண்டுகளித்தனர்.

சிறுபறை:

பறையின் உண்மைப்பயனை உணராமல் அதன் ஓசைக்காக விரும்பிப் பறையுடன் விளையாடினர். போர்க்களத்தில் நரம்புகளுக்கு உணர்ச்சியேற்றுவதற்காகப் பறையை முழக்கினர். "செல்வர்வீட்டுச் சிறுவர், சிறிய பறை ஒன்றைத் தோளில் மாட்டியிருந்தனர். அதன் கண்ணில் குருவி எழுதப்பட்டிருந்தது. அவர்கள் சிறிய கோலைக்கொண்டு அக் குருவியை ஓசைப் படுத்தினர் (நற்றிணை 58)"[9] இவ்வாறு சிறுவர்கள் சிறுபறை முழக்கி விளையாடியதை இலக்கியத்தில் பரவலாகக் காணலாம். வேட்டையாடச் செல்பவர்களுக்கும் இப்பறை மிகவும் உதவியாயிருந்தது. இப் பறையைக் கொண்டுதான் மிகுந்த ஓசையினை உண்டாக்குவார்கள். அவ் வொலியைக் கேட்ட வனவிலங்குகள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளிக்கிளம்பும். அவ்வமயம் வெளிக்கிளம்பிய விலங்குகளை வேட்டையாடிவிடுவர். "மலைவாழ் பழங்குடியினரும், வேட்டையாடி வாழும் மக்களும் சிறுதகரத்தினைக் கொண்டும், பறையினைக் கொண்டும் ஓசையை உண்டாக்கும் பழக்கம் இன்றளவும் நடைமுறையில் இருக்கிறது."[10] எனவே, பண்டைக்காலச் சிறுவர்களின் சிறுபறை முழக்கம் பிற்கால வேட்டைத்தொழிலுக்குச் சாதகமாக அமைந்திருக்கலாம்.

நெல்லி வட்டாடுதல்:

கல்லாத சிறுவர்கள் நெல்லிவட்டாடிய செய்தியினை நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

"ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்"[11] (நற்றிணை-3)

---

9. மேற்படி, ப. 576.
10. கட்டுரையாளர் இளமைப் பிராயத்தில் அறிந்தது.
11. கோ. சுப்பிரமணிய பிள்ளை, "பண்டைத் தமிழ் விளையாட்டுக்கள்," மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர், ப. 123., 1956.

நெல்லி வட்டாடுதல் தற்காலப் பாண்டிவிளையாட்டினைப் போன்றது. "பாண்டிநாட்டிற் பாண்டியெனவழங்கும் விளையாட்டு சோழ கொங்கு நாடுகளிற் சில்லி என்றும் சில்லாக்கு என்றும் பெயர் பெறும்"[12] "நெல்லிவட்டாடுதல் ஒருவகைக் கோலி விளையாட்டாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இக் காலத்துக் கோலி விளையாட்டை உண்டை உருட்டுதல் என்று அக்காலத்தில் வழங்கினர் போலும். பரிமேலழகரும் வட்டாடலை உண்டை உருட்டல் என்றே வழங்கினர்.[13] வட்டாடுதல் என்றால் சூதாடுதல் என்ற பொருளும் உண்டு.

பாண்டி விளையாட்டு, கோலிவிளையாட்டு இவற்றின் பயன்கள் ஒன்றுபட்டவைதான். குறிபார்த்து எறியும் பழக்கமும், குறி பார்த்து வீழ்த்தும் பழக்கமும் இவ் விளையாட்டின் மூலம் பயிற்சி யாகக் கிடைக்கிறது. இதுவே பிற்காலத்தில் குறிபார்த்து வேலெறிவதற்கும், ஈட்டியெறிவதற்கும் முன் அனுபவமாக அமை கிறது எனலாம். வட்டாடுதலைச் சூதாடுதல் எனக்கொண்டால் சதுரங்க ஆட்டத்துடன் தொடர்புடையதாக அமைகிறது. சதுரங்க ஆட்டம் 'அரசர்கள் ஆட்டம்' என்றே சிறப்பிக்கப்படுகிறது. படையை நடத்திச் செல்லும் தந்திர முறை, சமயோசிதபுத்தி இவ் வாட்டினால் கிடைக்கிறது.

சிற்றில் அழித்தலும், சிறு வீடு கட்டலும் :

மகளிர் மணல்வீடு கட்டி விளையாடும் ஆட்டு பொய்தல் அல்லது வண்டல் எனப்படும். மகளிர் கட்டிய அம் மணல்வீடு களைச் சிறுவர்கள் தம் காலால் அழித்துவிட்டு மகிழ்ச்சியால் ஓடுவர். சில சமயங்களில் சிறுவர்களும் மணல்வீடு கட்டி விளை யாடுவதுண்டு என்பதனைப் "பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன் (நற்றிணை. 362)"[14] என்ற வரிகளால் உணரலாம். குடும்பத்தை நடத்த வேண்டியநிலையில் (கற்புநெறி ஒழுக்கத்தில்) தேவையான பொறுப்புணர்ச்சிகளையும், பிற பயிற்சிகளையும் இவ் விளையாட்டு தந்திருக்கிறது எனலாம்.

---

12. ஞா. தேவநேயன், *தமிழ்நாட்டு விளையாட்டுக்கள்*. ப. 104, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1954.

13. கோ. சுப்பிரமணிய பிள்ளை, "பண்டைத் தமிழ் விளையாட்டுக்கள்," *மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்*, ப. 123, 1956.

14. த. இராசாராம், *தமிழில் அம்மானைப் பாடல்கள்*, ப. 161., (வெளியீட்டாளர், ஆண்டு குறிப்பிடப்படவில்லை).

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து சில செய்திகள் புலனுகின்றன. அஃதாவது சிறுவர்விளையாட்டுக்கள் பெரும்பாலும் 'போலச்செய்தல்' அடிப்படையிலேயே அமைந்துள்ளன. 'விளையாட்டு' வாழ்க்கைக்குப் பயிற்சி கொடுக்கும் களமாகவே இருந்து வந்திருக்கிறது. சிறுவர்கள் தங்களை அறிந்தோ அறியாமலோ இவ் விளையாட்டுக்களின் மூலம் பிற்கால வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சியை அடைந்து வந்திருக்கின்றனர். நிலங்களுக்குத் தகவும், தொழில்களுக்குத் தகவும் விளையாட்டு மாறுபட்டு வந்திருப்பதை நம்மால் உணரமுடிகிறது.

உலகம் உய்யவழி

[செல்வக்கண்ணன்]

சிட்டுப் பறந்தது வெளியே; அன்புப்
பெட்டை இருந்தது வீட்டில்;
தேர்ந்து தேர்ந்து தீனியைப் பொறுக்கித்
தேடி வந்தது சிட்டு;
வீட்டு வாயிலில் விரும்பி அழைக்க
வேண்டி யிருந்தது பெட்டை;
முத்தம் கொடுத்து மூக்கைப் பிளந்து
தீனியைத் தந்தது சிட்டு;
நத்திக் கிடந்த நாயகன் அன்பில்
தன்னை மறந்தது பெட்டை;
தன்னை மறந்தால் என்ன விளையும்?
பொதுநலம் பிறக்கும்; புவியும் சிறக்கும்!
தன்னை மறந்த அன்பிலே வந்தது முட்டை!
முட்டையில் வந்தது குஞ்சு!
குஞ்சால் விரிந்தது குடும்பம்!
குடும்பம் விரியக் குலவியது உலகம்!
தன்னை மறந்தால் வந்த உலகம்,
தன்னையே நினைந்தால் அழிந்தே போகும்!

வரிசையறிதல்

[ஞா. தேவநேயன்]

சென்றமாதச் 'செல்வி'யிதழில், "கழக நூலாசிரியர் இருவருக்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழக விருது" என்னும் கட்டுரைத் தலைப்பு என் கண்ணைக் கவர்ந்தது. கட்டுரையில் "கழக நூலாசிரியர்களான, உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, தமிழ் ஆராய்ச்சியறிஞரான **மயிலை சீனிவேங்கடசாமி** ஆகிய புலவர் பெருமக்கள் இருவருக்கும் கடந்த 29—3—80 அன்று, **மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல்** என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கிப் பொன்னுடை போர்த்திப் பாராட்டியது......விருதினைப் பெற்றதன் மூலம் புலவர் இருவரும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் கல்விக்குழு உறுப்பினராயினர்." என்று மட்டும் இருந்தது.

பொற்பதக்கம் பற்றியோ பொருட்கொடை பற்றியோ ஒரு குறிப்புமில்லை.

பண்டைக்காலப் புலவர் பெருமக்கள், ஐந்நூறு ஊர் முற்றூட்டும், நாற்பது நூறாயிரம் பொன்னும், ஒரு நாட்டு முழு வருவாயும், நூறாயிரம் பொற்காசொடு ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசொடு ஒரு நாடும், இன்னோரன்ன பிறவும், அரசரிடம் பரிசாகப் பெற்றனர்.

இக் காலத்தரசு, ஓய்வு பெற்ற ஏழைப் புலவர்க்கு, மாதந் தொறும் முன்பு 100 உருபாவும் இன்று 250 உருபாவும் ஆக உதவித் தொகை அளித்து வருகின்றது. அஃதொடு ஒரு பாவலர்க்குப் பத்தாயிரம் உருபா நன்கொடையும் நல்கியுள்ளது.

பண்டைப் புலவரெல்லாரும் பாவலராகவே யிருந்தனர்: அவர்க்குப் புலமையும் பாவன்மையும் ஒருங்கே யமைந்திருந்தன. இக் காலத்தில் ஒரு சிலரே பாவலர். அவருட் பெரும்பாலோர் புலவரல்லர். உணர்ச்சியேயூட்டும் பாவன்மையினும் அறிவு புகட்டும் புலமையே சாலச் சிறந்தது.

புலவர் புலத்துறை பற்றிப் பலவகையர்; ஆற்றல் பற்றிப் பல திறத்தர். இயலர், இசையர், நாடகர், கணியர், மருத்துவர் முதலி

யோர் பலவகையர்; நாவலர், பாவலர், விளக்கியர், தருக்கியர், நூல்வலர், உரைவலர், ஆய்வலர், கதைவலர், கட்டுரைவலர் முதலியோர் பலதிறத்தர். இவ்விரு சாராரும், மீண்டும், தலையர், இடையர், கடையர் என முந்நிலையர்.

இவ் வகையும் திறமும் நிலையும் அறிந்தே அவரவர்க்குத் தக்கவாறு பரிசளித்தல் வேண்டும். இங்ஙனம் பகுத்தறிதலையே வரிசையறிதல் என்றார் முன்னோர்.

''பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி' (புறநா. 6)

''வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை'' (ஷை 47)

''ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.'' (ஷை 121)

''வரிசை யறிதலின் தன்னுந் தூக்கி
இருங் கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே'' (ஷை 140)

''வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே'' (ஷை 206)

என்பன புலவரின் வரிசையறிதலைக் குறிப்பன.

உரைவேந்தர், கொண்முடிபுக் கலைச் செல்வர், ஔவை சு. துரைச்சாமிப் பிள்ளையும், வரலாற்றாராய்ச்சியாளர் மயிலைச் சீனிவேங்கடசாமியும், இன்றுள்ள மூத்த தலைமுறையைச் சேர்ந்த ஒப்புயர்வற்ற இருபெரும் புலவராவர்.

யசோதரகாவியவுரை, புறநானூற்று விளக்கவுரை, பண்டைச் சேர மன்னர் வரலாறு முதலியன ஔவை. சு. து. வும்; கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமுந் தமிழும், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், மறைந்து போன தமிழ் நூல்கள், மகேந்திரவர்மன், தெள்ளாறெறிந்த நந்திவர்மன், பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், துளுநாட்டு வரலாறு, காவியப் புலவனும் ஓவியக் கலைஞனும், முதலியன மயிலை சீ. வே.யும்; எழுதிய அரும்புலப் பொதுநலப்

படைப்புகளாகும். இவை பெரும்பாலும் ஏனையரால் எழுதப் படாதவை.

இவ் விருவர்க்கும் தனித்தனிக் குறைந்த பக்கம் பத்தாயிரம் உருபாவேனும் பொற்பதக்கத்துடன் வழங்குதல் வேண்டும். இவ் விருவரும் கழிபெரு மூப்பெய்தியுள்ளதொடு, புலவர் மயிலை சீனிவேங் கடசாமியார் நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமாயுள்ளார். ஆதலால், அரசோ, ஒரு பல்கலைக்கழகமோ, இரண்டும் இணைந்தோ, இச் சிறப்பை இயன்ற விரைவிற் செய்து தம் கடனைத் தீர்ப்பனவாக. நோயுண்டவர்க்கு மருத்துவஞ் செய்வதும் அரசின் கடமையே.

ஒரு புலவரைக் குன்றச்சிறப்பித்தல் போற்றாமையின் பாற் பட்டதே.

Damn with faint praise a commend so frigidly as to suggest disapproval.

குறிப்பு: இக்கட்டுரை எழுதியபின், மிக வருந்தத்தக்க அமங்கலம் நேர்ந்துள்ளது. ஆதலால், ஆராய்ச்சிப் பெரும்புலவர் மயிலை சீனி வேங்கடசாமிக்குக் கொடுக்கவேண்டியதை அவர் குடும்பத்தார்க்குக் கொடுக்க.

———

குறிப்பு:

சங்க நூல்களில் உகாய்

முன் இதழில் (சிலம்பு ருச, பரல் - அ) 'சங்க நூல்களில் உகாய்' என்னும் தலைப்பில் காணப்படும் கட்டுரையின் முடிவில் கீழ்க்காணும் செய்தியினை இணைத்துப் படித்துக்கொள்ளுமாறு அன்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்:

குறுந்தொகைப் பாடல் அறுபத்துமூன்றாவதை இயற்றியவர் பெயர் 'உகாய்க்குடி கிழார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 'உகாய்க்குடி' என்ற ஊரானது களர் நிலத்தில் உகாய் மரங்கள் நிறைந்த ஊராக இருக்கலாம். உகாய் என்ற சங்ககாலப் பெயர் இன்றும் நாட்டுமக்கள் வாயில் மாறி வழங்குகின்றது. களர் நிலத் தில் இந்த மரம் வாழ்வதைச் சங்க நூல்கள் குறிப்பிட்டுள்ளன. நாட்டுப்புற மக்களும் இந்தமரம் களர் நிலத்தில் வளர்வதைக் கண்டு 'களர்வா' என்றழைக்கின்றனர். இந்தப் பெயர் 'களர் உகாய்' என்ற பெயரின் திரிபே என்பதில் ஐயமில்லை. சங்ககாலப் பெயரான 'உகாய்' நாட்டு மக்கள் வாயில் இன்றும் பயில்வதைக் காணலாம்.

லலிதாங்குர பல்லவ கிருகம்

[தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம். விசாரத்

இணைப்பதிவாளர் – தனிஅலுவலர், மத்திய கூட்டுறவு வங்கி,

திருநெல்வேலி–3.]

திருச்சிராப்பள்ளி என்றாலே அயல்நாட்டுப் பொறியியல் வல்லுநர்க்கும் வியப்பை அளித்திடும் மலைக்கோட்டையும், விபீடணனுடன் புராணத்தொடர்பு கொண்ட உச்சிப்பிள்ளை யாரும், நீர்ப்பதியான (அப்புத்தலம்) திருவானைக்காவும், வைணவர் களின் தலைசிறந்த பதியான திருவரங்கமும் நினைவிற்கு வரும். அருட்செல்வர்கள் ஈசனைத் 'தாயும் நீ' எனப் போற்றிப் பரவிய தற்கேற்ப, இரத்தினாவதி என்னும் செட்டிப்பெண்ணுக்குத் தாயாகி, தாயுமானார் என்ற பெயரிலேயே இறைவன் அருள்பாலிப்பதும் யாவரும் அறிந்த ஒன்றே. இம்மட்டோ,

''சாய்ந்தாள் கண்ணபுரத்தாள்
சாதித்தாள் சமயபுரத்தாள்

எனப்பெறும் சமயபுரம் மாரியம்மனும் நினைவுகூரத்தக்கவளே. சைவ சமயகுரவர்களில் ஞானசம்பந்தராலும் மற்றும் அப்பராலும் பாடப்பெறும் பேறு பெற்றது இப் பதி. இது வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

தாயுமானார் கோயிலிலிருந்து உச்சிப்பிள்ளையார் கோயிலுக் குப் பிரியும் வழியில் மலைச்சாரலில் குடைவரை ஒன்று உள்ளது. தெற்குநோக்கி உள்ள இந்தக் குடைவரையின் முகப்பில் 4 தூண் களும் 2 அரைத்தூண்களும் உள்ளன. அவை நடுவில் சதுர மாகவும், மேலும் கீழும் எட்டுப்பட்டை கொண்டதாகவும் பகுக்கப் பட்டுள்ளன. நடுவில் பட்டையுடன் கூடிய தரங்கப்போதிகை காணப்படுகிறது. முன்வரிசையைப் போன்று உள்வரிசையிலும் 4 தூண்களும் 2 அரைத்தூண்களும் உள்ளன. இரு தூண் வரிசைகளுக்கு இடையே பெரிய மண்டபமும், அதை அடுத்து அந்தராளம் போன்ற ஒரு சிறிய பகுதியும் உள்ளன. தூண்களின் சதுரங்களில் தாமரை இதழ்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. தாமரை இதழ்களில் இங்குப் பல்வேறுவகை காணப்படுவது தனிப்பெருஞ்சிறப்பாம்.

மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் மேற்குநோக்கிக் கருவறை அமைந்துள்ளது. உள்ளே எந்தத் தெய்வத்தின் திருஉருவும் இல்லை. கருவறைக்கு முன் 4 அரைத்தூண்களுடன் கூடிய இரண்டு புரைகளில் இரு வாயிற்காப்போர் உள்ளனர். கருவறைக்குக் கீழே அதிஷ்டானமும் மேலே கந்தர்வர்கள் தலைகளுடன் 3 கூடுகளுடன் கூடிய கபோதகமும் காணப்படுகின்றன. வாயிற்காப்போர் கர்ணமகுடம் அணிந்து, இரு கைகளுடன், மானிட உருவில் (பல்லவர் பாணியில்) திரிபங்க நிலையில் உருவாக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் நேராக நோக்காது சாய்ந்த நிலையில் (மகேந்திரவர்மன் பாணியில்) செதுக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஒரு கை கதையின்மீதும், மற்றொரு கை கீழே தொங்கிய நிலையிலும் (தண்ட அல்லது கஜ அஸ்தம் எனப்படும்) உள்ளன. கதையை அரவம் சுற்றி உள்ளது.

மண்டபத்தில் கிழக்கு நோக்கிக் கங்கைவார் சடைக்கரந்தார் வடிவில் 4 கைகளுடன் சிவபெருமான் புதைசிற்பமாக அமைக்கப்பட்டுள்ளார். பின் வலக்கை சடைமுடி ஒன்றினைப் பிடித்த நிலையில் உள்ளது. அதை அடுத்துக் கங்கை மார்பில் கூப்பிய கரங்களுடன் காணப்படுகிருள் பின் இடக்கையில் ஒன்றும் இல்லாவிடினும் அதனை அடுத்து மான் காணப்படுவதால், அது மானைப்பிடிக்க உள்ளதாகக் கொள்ளப்படுகிறது. முன் வலக்கையில் பாம்பு ஒன்று தென்படுகிறது. முன் இடக்கை இடுப்பில் ஊன்றிய நிலையில் (கத்ய வலம்பித அஸ்தம் எனப்படும்) உள்ளது. அவரது இடக்கால் தரையில் ஊன்றியும், வலக்காலை மடக்கி, ஒரு அசுரன் தலைமீது வைத்தும் வடிக்கப்பட்டுள்ளன. தலையில் சடாமகுடமும், மார்பில் அரவம் முப்புரிநூல் போன்றும், கழுத்தில் மாலையும், தோளில் வாகுவலையமும், கைகளில் கடகமும் அணிந்துள்ளார். இடையில் உதரபந்தனம் காணப்படுகிறது. அவர் அணிந்துள்ள ஆடையின் மடிப்பு நன்ருகத் தெரிகிறது. இவருக்கு வலப்பக்கம் பகீரதனும், இடப்பக்கம் முனிபுங்கவர் ஒருவரும், இறைவனைத் துதிப்பதைக் காட்ட இருகைகளை மேலே தூக்கிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளனர். இரு கைகளுடன் கூடிய 4 தேவர்கள் இருமருங்கும் காணப்படுகின்றனர். அவர்களின் ஒருகை துடை மீதும், மற்ெருரு கை தூக்கிய நிலையிலும் உள்ளன. ''அலை புரிந்த கங்கை தாங்கும் அவிர் சடையானின்'' வடிவம் பல்லவர் காலச் சிறந்த சிற்பங்களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. இதைப் பின்பற்றி மாமல்லபுரத்தில் புதைசிற்பங்கள் உருவாக்கப்பட்டனவாகக் கொள்ளப்படுகிறது.

இங்கே புதைசிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ள "எரிபுன் சடை தாழ விரியும் புனல் சூடினனின்" வடிவம் பொதுவாகக் காணும் வடிவங்களினின்றும் வேறுபட்டு உள்ளது. "அத்தன் தன் முன் இடக்கையால் அன்னையை அரவணைக்கவேண்டும். முன் வலக் கையால் அன்னையின் தாடையைத் தொடுவதன் மூலம் அன்னையைச் சமாதானப்படுத்துவதாகக் காட்டவேண்டும், சடை முடியில் கங்கை இருக்கவேண்டும். தனக்குப் போட்டி ஏற்பட்டு விட்டதே என்று அன்னை பதட்டநிலையில் வடிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று திரு. கோபிநாதராவ் தமது "இந்து தெய்வ வடிவங்களின் அடிப்படைகள்" என்ற நூலில் குறிப்பிடுகிறார். ஆனால், இங்கோ அன்னையே உருவாக்கப்படவில்லை. மேலும் ஐயனின் காலடியில் நடராசர் வடிவத்திற்கு உள்ளது போன்று அசுரன் ஒருவன் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாம்.

இந்து சமயத்தில் "கந்தம் கமழ் கொன்றை சூடினனே" அழித்தற்கடவுளாகக் கொள்ளப்படுகிறது. "அடிக்கும் கைதான் அணைக்கும்" என்று நாட்டு வழக்காகச் சொல்லுவர். அழித்தல் தொழிலை மேற்கொண்ட அண்ணல் அருளுதலையும் மேற்கொள் கிறான். அத்தகு அருள்வடிவங்களிலே ஒன்றும் "விரிந்திலங்கு சடையொடுங்கத் தண் புனலைத் தாங்கியாளின்" திருஉரு. பகீரத னின் முன்னோர்கள் உய்யக் கங்கை விண்ணினின்றும் மண்ணிற்கு இழிந்தால், உலகு அழியும்; எனவே உலகைக் காக்கவேண்டும் என்ற அருள்நோக்கோடு அத்தன் தன் சடையிலே கங்கையை ஏற்று, தேவையான நீரை விடுகிறான். அக்கால வழக்குப்படி, போரையே முக்கிய தொழிலாகக்கொண்ட மன்னர்களுக்குத் தம் குடிமக்களையும் காத்து ஓம்புதல் தலையாய கடமையாம் என்பதனை உணர்த்துவது போன்று இஃது உள்ளது. எனவே அருங்கலை களைப் பேணி வளர்த்த மகேந்திரவர்மன் இந்த அருள்வடிவிலே தன்னை இழந்து, இதை இங்கு புதைசிற்பமாக உருவாக்கினான் எனக்கொள்ளலாம்.

தமிழகத்திலே குடைவரைக்கோயிலைத் தோற்றுவித்தவனே பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன்தான். இவன் ஏற்படுத்திய வேறு எந்தக் குடைவரைக்கோயிலிலும் புதை சிற்பங்கள் கிடையா. இங்கு மட்டுமே புதைசிற்பம் அமைந்துள்ளது தனிப் பெருஞ்சிறப்பாம். மகேந்திரவர்மனுக்குக் குணபரன், அவனி பாஜனன், லலிதாங்குரன், விசித்திர சித்தன், சேத்தகாரி என்பன போன்ற பல பட்டங்கள் உண்டு. அவற்றில் ஒன்றான லலிதாங்குரன் என்ற பெயரால் இந்தக் குடைவரை 'லலிதாங் குரப் பல்லவகிருகம்' எனப்படுகிறது.

இந்தக் குடைவரை, பல்லவப் பேரரசு தெற்கில் எவ்வளவு தூரம் பரவி இருந்தது என்பதற்குச் சான்ருக உள்ளது. இதற்குத் தெற்கே பல்லவர்களின் குடைவரைகள் இல்லே. உள்வரிசையில் உள்ள தூண்களில் மகேந்திரவர்மன் குடைவரையை அமைத்ததற்கான கல்வெட்டு காணப்படுகிறது. குடைவரையின் பின் சுவரில் சுமார் 900 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவபெருமான் மீது பாடிய கலித்துறை அந்தாதி பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு மாமன்னர் இராசராச சோழனின் 16 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும் உள்ளது. அதினின்றும் தரிசாகக் கிடந்த நிலத்தை 5 கழஞ்சு பொன்னுக்கு ஒருவருக்கு விற்பனே செய்யப்பட்டது தெரிகிறது. அந்த நிலத்தை அவர் உழுது பயிரிட்டு, சித்திரைத் திருவிழாவில் 9 நாட்களுக்கு இறை அன்பர்கள் மற்றும் அந்தணர்களுக்கு அமுது படைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 862ல் அரியணேயேறிய பாண்டிய மன்னன் வரகுணவர்மனின் 4வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும் காணப்படுகிறது. அதில் திருமலேப்பெருமான் அடிகள் ஆலயம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடைவரை மகேந்திரவர்மனல் வெட்டப்பெற்றமையால் இதன் காலம் 7ஆம் நூற்ருண்டாகும்.

———

கூர்ந்து பார்மின்கள்!

உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கில மொழியின் உதவிகொண்டே நன்கு நடைபெறுதலே அறிந்து வைத்தும், அதனேப் பொதுமொழியாக வழங்காமல், விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்படாத இந்தியைப் பொதுமொழியாக்க முயல்வோர் நம்மனேர்க்கு உண்மையில் உதவி செய்பவர் ஆவரோ? கூர்ந்து பார்மின்கள்!

—மறைமலேயடிகள்

(மறைமலேயடிகள் அறிவுரைக் கோவை, பக். 191-192)

செய்திகளும் குறிப்புக்களும்

"சிந்தனை மலர்கள்" வெளியீட்டு விழா

தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நல்ல புலமையும், தெளிவும், கட்டுரை வன்மையும், சிந்தனை ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் நீதிபதி எஸ். மோகன் அவர்களாவார்.



இவர் 'சான்றோர் வாக்கு' என்ற தலைப்பில் அனைத்திந்திய வானொலியில் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளின் தொகுப்பே 'சிந்தனை மலர்க'ளாக மலர்ந்துள்ள மலர்க் கொத்தாகும்.

சிறந்த சிந்தனைச் செல்வர்களான ஜான் ரஸ்கின், எமர்சன், அரிஸ்டாட்டில், விவேகானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சர், இரவீந்திரநாத் தாகூர், திருவள்ளுவர், திருமூலர், பாரதியார், பாரதிதாசன், ஆகியோரைப் பற்றியும் நாலடியார் நூல்பற்றியும் அரிய கருத்துக்களை மிக அழகாக, நல்ல தமிழில் கூறியுள்ளார்.

இந்நூலின் வெளியீட்டு விழா 25—4—80இல் சென்னை ராணி சீதை ஆச்சி மன்றத்தில் நடைபெற்றது. உயர்நீதிமன்றத் தலைமை நடுவர் மாண்பமை எம். எம். இசுமாயில் அவர்கள் தலைமை தாங்கி நூலினை வெளியிட, முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ள அறிஞர் பலர் பாராட்டுரை வழங்க விழா இனிது நிறைவேறிற்று.

சிந்தனைக்கு வேலைதரும் சீரிய நூலை உருவாக்கித் தந்த அறிஞரும் நடுவருமான உயர்திரு மோகன் அவர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இலக்கியச் சிந்தனை 10ஆவது ஆண்டுவிழா

நூலகப் பரிசுத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெற்ற 1979ஆம் ஆண்டின் சிறந்த நூலுக்குப் பரிசளிப்பு விழா 13—4—80இல் சென்னை மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திரு. பி. எஸ். இராமையா அவர்களின் மதிப்புரை பெற்ற பத்தாவது சிறுகதைத் தொகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது. மலையாளப் புதின ஆசிரியர் திரு. தகழி சிவசங்கரப் பிள்ளை அவர்கள் பரிசுகளை வழங்கினர். திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் சில புதிய பணிகள் என்ற பொருளில் உரையாற்றினர், கவிஞர் திரு.அப்துல்ரகுமான் அவர்கள் 'மானமில்லாத துணிகள்' என்னும் தலைப்பில் கவி பாடினர்.

"செட்டிநாட் டரசர் மெய்க்கீர்த்திமாலை" வெளியீட்டுவிழா

கவிஞர் திரு. சுப. இளங்கோவன் அவர்கள் எழுதிய "செட்டி நாட்டரசர் மெய்க்கீர்த்தி மாலை" என்னும் புத்தக வெளியீட்டு விழா 20—4—80இல் மயிலை பாரதிய வித்தியாபவன் அரங்கில் முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ. திருநாவுக்கரசு வரவேற்புரை ஆற்றினார். கவியரசு கண்ணதாசன் அவர்கள் மெய்க்கீர்த்தி மாலை புத்தகத்தை வெளியிட்டார்கள். கலைமாமணி டி.எம். சௌந்தரராசன் அரசர் மெய்க்கீர்த்திப் பாடல்களைப் பாடினார். திருவாளர்கள் பெரியசாமித்தூரன், முனைவர் நன்னன், சி. பாலசுப்பிரமணியன், அவ்வை நடராசன், திருமதி உமையாள் முத்து ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். முனைவர் இராசா சர் முத்தையா செட்டியார் ஏற்புரை வழங்கினார். கவிஞர் சுப. இளங்கோவன் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

முத்தமிழ்க் காவலர்க்கு வரவேற்பும், பாராட்டும்

நெய்வேலி அரவிந்தர் பள்ளியில், பாவாணர் தமிழ்க் குடும்பம், உலகத் தமிழ்க் கழகம் நெய்வேலிக்கிளை இரண்டும் இணைந்து 12—4—80இல் முத்தமிழ்க் காவலர்க்கு வரவேற்பளித்து, பொன்னாடை போர்த்திப் பாராட்டின. குமரிகள் தேன்மொழி, தமிழ்ச் செல்வி ஆகியோர் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர். திரு. திருவழகன் தலைமை ஏற்க, தா. அன்புவாணன் அவர்களும், திரு. கலைச்செல்வன் அவர்களும் முத்தமிழ்க் காவலரின் பண்பு நலன்கள் பற்றிப் பாராட்டுரை வழங்கினர். திரு. கோ. தங்கவேல் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

வாலாசாபாத் மாசிலாமணி முதலியார் உயர்நிலைப்பள்ளி 64ஆம் ஆண்டு விழா

வாலாசாபாத் மாசிலாமணி முதலியார் உயர்நிலைப்பள்ளியின் 64ஆம் ஆண்டு விழா 11—4—80இல், காஞ்சிபுரம் பட்டுத் துணி வணிகர் திரு. மு. லோகநாத முதலியார் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காஞ்சிபுரம் கணக்குத் தணிக்கையாளர் திரு. கே. ஆர். சத்தியம் அவர்கள் மாணவர்கட்குச் சிறப்புரை வழங்கினார். திரு. ஏ. குப்புசாமி நாயுடு அவர்கள் மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினார். சித்த மருத்துவச் செம்மல் டாக்டர் ப. சிற்சபை அவர்கள் மாணவர்களையும் பாடசாலையையும் வாழ்த்தினார். பாடசாலைப் பொறுப்பாளர் திரு. நா. ப. தணிகையரசு அவர்கள் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

தமிழ் வளர்ச்சி மன்றம்—தொடர் சொற்பொழிவு

மருத்துவமாமணி இரத்தினவேலு சுப்பிரமணியம் செந்தமிழ்க் கல்லூரியின் சார்பில் 19—4—80 முதல் 29—4—80 முடிய, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ., இரண்டாம் பருவத் தேர்வு நோக்கில் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற்றன. டாக்டர் சுப. சண்முகநாதன் தலைமை தாங்கினார். உயர்நீதி மன்ற நடுவர் எம். அனந்த நாராயணன் சொற்பொழிவைத் தொடங்கி வைத்தார். புலவர்,

நா. ரா. முருகவேள் முதற் சொற்பொழிவை நிகழ்த்தினர். தொடர்ந்து 10 சொற்பொழிவுகளை அறிஞர்கள் பலர் பல்வேறு தலைப்புகளில் ஆற்றினர்.

"அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்" நூல் வெளியீட்டு விழா

மேலையூர் பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியின் முதல் வெளியீடான "அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்" நூல் வெளியீட்டு விழா 8—5—80இல் திருப்புகலூர் அருள்மிகு அக்னீசுவரசாமி திருக்கோயிலில் நடைபெற்றது. நீதிபதி மாண்பமை பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள் தலைமை தாங்கினர். முன்னாள் நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பாராட்டுரை வழங்கினர். முன்னாள் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. ஏ. உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் கருத்துரை வழங்கினர்.

புதுவைத் தனித்தமிழ்க் கழக 2ஆம் ஆண்டு நிறைவு விழா

22—3—80இல், புதுவை, கதிர்காமத்தில் பள்ளித்திடலில் மாலை 6 மணி அளவில் தனித்தமிழ்க் கழகத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. திரு. தமிழநேயன் தலைமை தாங்க, திரு. வே. பெத்த பெருமாள் முன்னிலையில் திருவாளர்கள் அரிமதி தென்னன், த. மு. கிருட்டினன், அ. பசுபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். புதுவைக் கல்வி அமைச்சர் திருவாட்டி மாண்புமிகு இரேணுகா அப்பாதுரை அவர்கள் ஆண்டு மலரை வெளியிட திரு. மு. சேரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். புதுவை முதல்வர் மாண்புமிகு தெ இராமச்சந்திரன் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனாரின் படத்தினைத் திறந்து வைத்தார். அமைச்சர் மாண்புமிகு பெருமாள்ராசா வாழ்த்துரை வழங்கினர். 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரை ஆற்றினர். மற்றும் அறிஞர் பலர் உரையாற்றினர்.

மாமேதை லெனின் 110ஆவது பிறந்தநாள் விழா

அறிஞர் லெனினின் 110ஆம் ஆண்டு நிறை விழாவைக் கொண்டாடும் வகையில் லெனின் எழுதிய "கிழக்கு நாடுகளின் விடுதலையும் வளர்ச்சியும்" என்னும் தமிழ் நூலின் வெளியீட்டு விழாவும், லெனினின் மற்ற நூல்கள், அவர்தம் நிழற் படங்கள் கொண்ட கண்காட்சித் திறப்பு விழாவும் 21—4—80 அன்று மாலை சென்னை மத்திய நூலகத்திலுள்ள பெருமண்டபத்தில் நடைபெற்றன. விழாவிற்குத் திரு. ரெ. து. சுந்தரவடிவேலு தலைமை தாங்கினர். சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் நூலினை வெளியிட்டார். திருமதி ராஜம் கிருஷ்ணன் கண்காட்சியைத் திறந்து வைத்தார். திரு. வி. வி. ஒசாகின், த. ஜெயகாந்தன், ப. மாணிக்கம், என். டி. வானமாமலை ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு டுச—சகடுஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி தெய்வநாயகி ஜோதிஅவர்கள்	ரூ.	10 00
உயர்திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்		10—00
,, ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்		5—00
,, A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை		5—00

சங்க இலக்கியத் திணை—துறை அகராதி

[கு. சிவஞானம், எம். ஏ., மொழியியல் சான்றிதழ் தமிழ் வளர்ச்சி, உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி.

சங்க இலக்கியப் பாடல்கள் திணை, கூற்று, துறை முதலிய அமைப்புக்களுக்குள் அடங்கியவை. இவற்றின் விளக்கத்தைத் துணை யாகக் கொண்டே பாடல்களை அணுக வேண்டும்.

ஒரு திணையைச் சார்ந்த ஒரு புலவர் எழுதிய ஒரு துறைப் பாடலைப் படிக்கும் பொழுது, அத் துறையில் அப் புலவரே எழுதிய பிற பாடல் களையும் பிற புலவர்கள் எழுதிய பாடல்களையும் அறிந்து ஒப்பிட்டுப் படிப்பது, அக் குறிப்பிட்ட துறை பற்றிய புலவர்களின் சிந்தனை ஓட்டத்தைத் தெளிவுபடுத்தும்.

சங்க இலக்கியம் இப்பொழுது உள்ள அமைப்பு முறையில், ஒரு துறை பற்றிய பாடல்கள் எத்துணை உள்ளன? அவற்றை எழுதிய புலவர் யாவர்? என்ற விவரங்களை விரைந்து அறிதற்கு இயலாததாக உள்ளது எனவே, இதற்கு அகராதி ஒன்று இன்றியமையாதது.

இவ் வகராதியில் அகப்பாடல்கள் ஒரு தொகுதியாகவும் புறப் பாடல்கள் பதிற்றுப் பத்து, பரிபாடல், புறநானூறு ஆகியவை ஒவ் வொன்றும் தனித்தனி மூன்று தொகுதிகளாகவும் விவரங்கள் தொகுக் கப்பட்டு உள்ளன.

புறநானூற்று விவரத் தொகுப்பு, முதலில் ஒவ்வொரு தொகுதியும் திணை முறைப்படி பாடல்களின் விவரங்கள் வரிசைப்படுத்தித் தரப் பட்டு உள்ளன. இஃது அடிப்படை.

அடுத்த பிரிவில் துறைகளின் அகரவரிசை தேவையான பிற விவரங்களுடன் தரப்பட்டுள்ளன.

அடுத்த பிரிவில் ஆசிரியர் அகரவரிசை தேவையான பிற விவரங் களுடன் தரப்பட்டு உள்ளன.

இவ்வாறே, பதிற்றுப் பத்து, பரிபாடல் ஆகியவற்றின் விவரங்கள் தனித்தனிப் பகுதிகளாகத் தரப்பட்டு உள்ளன.

இவை இப்பொழுது எழுதப்பட்டுச் சரிபார்க்கப்பட்டுத் தயாராக உள்ள பகுதிகளாகும். அகப் பாடல்களின் விவரத் தொகுப்புப் பணி நிறைவுற்றுள்ளது. வரிசைப்படுத்தி எழுதப்படவேண்டும்.

மதிப்புரை

பதிப்புக்கலை :

[ஆசிரியர் திரு. அ. விநாயகமூர்த்தி எம். ஏ., எம். பில்.,

வெளியீடு: பாலமுருகன் பதிப்பகம், 90, பாரதியார் தெரு, மதுரை—625011. பக். 4+114. விலை ரூ. 6—00.]

"தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" என்று தமிழியக்கத்தில் வலியுறுத்தினர் பாவேந்தர்.

அவ்வாறு துறைதோறும் வளர்ந்துவரும் கலைநூல்களில் ஒன்று 'பதிப்புக்கலை' என்னும் நூலாகும்.

இத் துறையில் சில கட்டுரைகளும், கருத்துரைகளும், அறிக்கைகளும் வெளிப்பட்டிருப்பினும் நூலுருக்கொண்ட பெருமை இதற்கே உண்டு. 'புத்தகக்கலை', 'அச்சுக்கலை' என்னும் நூல்களில் பதிப்புக்கலை பற்றிய செய்திகள் உளவாயினும் ஒரு பகுதியாக அமைந்த அளவே அதற்கு உண்டு. ஆகலின் இக் கலைத்துறைக்குத் தமிழில் வாய்த்த முதல் நூல் என்னும் பெருமையும் இதனைச் சாரும்.

ஒரு நூல் உருவாதலில் பதிப்பாசிரியர்க்குரிய பங்கினையும் பணிச் சிறப்பினையும் ஆசிரியர் நன்கனம் விளக்கியுள்ளார். "பதிப்பாசிரியர் நூலாசிரியரின்மீது மேலாதிக்கம் செலுத்துபவர் அல்லர்; நூலாசிரியர்க்கு உதவி செய்பவரே" என்றும், "தம்மை வெளிப்படுத்திக்கொள்வதற்காகப் பதிப்பாசிரியர் பதிப்பில் ஈடுபடவில்லை. ஆசிரியருடைய உழைப்பினைச் சரியான முறையில் வாசகர் உணர்ந்துகொள்வதற்கு உதவவே அப்பணி புரிகின்றார்" என்றும் இவர் பதிப்பாசிரியர் பொறுப்பினை விளக்குவது மிக மதித்துப் போற்றத்தக்க கருத்தாம் (12)

திருத்தற்குறிகள் (31) சந்திபிரித்தல் (38) படங்கள் (44) (பின்னிணைப்பு) அகரநிரல் (47) உரிமைப் பதிவு (84) ஆகியவை பற்றி அரிய கருத்துகளைச் சான்றுடன் விளக்குகிறார் ஆசிரியர்: பதிப்பாளர்க்கும், பதிப்பாசிரியர்க்கும் பயன்தரத் தக்க பின்னிணைப்புகளை ஆசிரியர் தந்திருப்பது இத்துறையில் புதிதாகப் புகுவார்க்கு நல் உதவியாம் (102 - 113)

"ஏட்டில் இருந்த தமிழ் இலக்கியங்களில் முதன் முதல் முழுமையாக அச்சானது திருக்குறள் (1838)" என்று (26) ஆசிரியர் குறிப்பிடுகிறார். நெல்லை அம்பலவாண கவிராயரால் திருக்குறள் மூலம் 1812 ஆம் ஆண்டிலேயே முழுமையாக வெளியிடப் பெற்றுள்ளது என்பது அறியத் தக்கதாம்.

"பேட்டரி, கார்பரேட்டர், ராடார், வைண்டிங், ரிவைண்டிங், பம்பிங்" இன்னவை "தமிழ்ச் சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதாகவே அமையும்" (21) என்னும் ஆசிரியர் கருத்து ஏற்கத்தக்கது அன்றாம். இக் கருத்துடைமையால் மிக எளிமையாக வழக்கில் ஊன்றிப் போன சொற்களைக் கூட ஒழிப்பதற்கே ஆசிரியர் வழிகாட்டி விடுவாரோ என்னும் இயற்கையான அச்சம் மொழி நலம் விழைவார்க்கு உண்டாதலைத் தவிர்க்க இயலாது! புதுச் சொல்லாக்கம் செய்தலிலும் திறங்காட்டியிருக்கும் ஆசிரியர், தம் கொள்கையை மறுஆய்வு செய்துகொண்டால் உருப்படியான மொழித்தொண்டு செய்யக்கூடும் என நம்பலாம்.

பதிப்புக்கலை என்னும் புதுக்கலை நூலை வரவேற்றுப் போற்றிப் பயன் கொள்ளல் அறிவார்வலர் கடமையாம். ஆசிரியர் நன்முயற்சி வெல்க!

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர்: வ. சுப்பையா

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

திருவள்ளுவர் திருவுள்ளம்—மு. அப்துல்கறீம், எம்.ஏ.	5	00
வண்ணப் பூக்கள் (மூன்றும் தொகுதி)—ப. நீலகண்டன்	15	00
பாரதிதாசன் பாட்டுத் திறம்—மு. அப்துல்கறீம்	9	00
அவசரகால அனுபவ வைத்தியம்—எஸ். ஏ. சூசைராஜா	6	00
குளுவ நாடகம்—டாக்டர் ஏ. என். பெருமாள்	5	00
உலகத் தமிழ் எழுத்தாளர் யார் எவர்? —ச. வே சுப்பிரமணியம், ந. கடிகாசலம்	6	00
சீருப்புராணத் திறனாய்வு—மு. அப்துல்கறீம், எம்.ஏ.	12	00
பாரசீகத்து ரோஜா—பி. சி கணேசன்	12	00
அரும்புகள்—திரு. ஜெயகாந்தன்	12	00
அச்சும் பதிப்பும்—மா சு. சம்பந்தம்	30	00
அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும் (ராப்பர்)	24	00
(கலிக்கா)	36	00
சிந்தனை மலர்கள்—நீதிபதி எஸ். மோகன்	5	00
உழைப்பால் உயர்ந்தவன் —மூலம்: டால்ஸ்டாய், தமிழாக்கம்: ப. ராமசாமி	3	50
சிக்கன வகைகள்—மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு	3	25
மாயமான் வேட்டை—இந்திரா பார்த்தசாரதி	11	00
புனைகதைத் திறன்—முனைவர் இரா. மோகன்	10	00
மு. வ. கடித இலக்கியம், கண்ணோட்டம் —முத்துசண்முகம்	5	55
தமிழ்நாட்டுச் சிறுவர் நாடோடிக் கதைகள் —வீர. வேலுசாமி	5	00
பாரதியும் பாரதிதாசனும்-ஒப்பில் திறனாய்வு —முனைவர், சி. கனகசபாபதி	30	00
சைவசித்தாந்தத் திறவு—க. வச்சிரவேலு முதலியார்	8	00
சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும் —முனைவர் D. P. சித்தலிங்கம்	8	00
கைரேகைக் களஞ்சியம் —சாரபல சோதிடர், ஆர். வி. பி.	10	00
என்றும் இளமை—புத்தனேரி சுப்பிரமணியம்	12	00
இதழியல் இரா. கோதண்டபாணி, எம்.ஏ.	13	50
மொழியியலும் பிறவியலும்—முனைவர் முத்து சண்முகம்	4	00
துணுக்குத் திரட்டு—முனைவர் இரா. மோகன்	5	00
விநாயக கவசம் - விளக்கவுரை —வித்துவான் க. வா. சச்சிதானந்தம்	1	80
A Short History of The Ancient Tamils and Their Literature—S. Ratnasamy, B.A.	10	00

பதிவு எண் : M 4899

கழகப் புதிய வெளியீடுகள்

கண் பாதுகாப்பு

ஆசிரியர் : டாக்டர். என். எஸ். சுந்தரம், M. S., D. O.
கண் மருத்துவர், ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

கண்ணிற்கு வரும் நோய்கள், விபத்துக்கள், பிறவிக் குறைபாடுகள் இன்ன பிற இடர்ப்பாடுகளிலிருந்து கண்களைப் பாதுகாப்பது எப்படி என்பனபற்றியும், பள்ளி ஆசிரியர் கடமை, கண் வைப்பகம் ஆகியன பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியானால் ஒவ்வொரு வீட்டிலும் இப் புத்தகம் இருக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும். விளக்கப் படங்களுடன் கூடிய-அழகிய-பயனுள்ள புத்தகம்.

(அச்சில்)

தோல் பாதுகாப்பு

ஆசிரியர் : டாக்டர் எம். நடராஜன்.

தட்பவெப்பங்களுக் கேற்ப நமது உடலுக்குப் பாதுகாப் பளிப்பது தோல். தோலின் அமைப்பு, அது செய்யும் பணிகள், தோலுக்கு வரும் நோய்கள், அவற்றை நீக்கும் முறைகள் இன்னபிற செய்திகள் இந் நூலின்கண் நன்கு விளக்கப்படு கின்றன. தோல் பாதுகாப்பு என்பது உடல்நலப் பாதுகாப் பின் அடிப்படையாகும். எனவே, இந் நூல் இல்லங்கள் தோறும் இருக்கவேண்டிய ஓர் இன்றியமையா நூலாகும். விளக்கப் படங்களுடன் கூடியது. (அச்சில்)

கழக இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரன் எழுதிய மூன்று அரிய நூல்கள்

மதுரைக் கோயில் வரலாறு

மதுரை மீனாட்சி, சொக்கநாதர் கோயில்கள், பொற் றாமரைக் குளம் ஆகியவற்றின் அமைப்பு, மாண்பு, திருவிளையாடற் புராணச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியன பற்றி, உரையாடல் முறையில் இனிய தமிழில் அமைந்த பயனுள்ள வரலாற்றுநூல். அறநிலைய ஆணையர் உயர்திரு யு. சுப்பிரமணியம் அவர்கள் அணிந்துரையுடனும் படங் களுடனும் கூடியது. விலை ரூ. 6 - 00

வளர்புகழ் வள்ளுவம்

திருக்குறள் உலகப் புகழ் பெற்றது. அதன் அருமை பெருமைகள் அளப்பில. எனினும் அவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில் தொகுக்கப்பட்ட கருத்துரைகளின் தொகுப்பே இந்நூல். திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிக்கு இந்நூல் துணைபுரியும். விலை ரூ. 2 - 00

தமிழ் இலக்கியத்தில் இயற்கை ஓவியம்

தமிழிலக்கியத்தில் வரும் விலங்கினங்களின் வியத்தகு பண்புகளை விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இதில் விளக்கப்படும் காட்சிகள் நேரில் காண்பன போன்று சுவைபட அமைந்துள்ளன. உயிர் நூல் புலவர்கட்கும், ஆராய்ச்சியாளர்க்கும் இந்நூல் துணைபுரியும். விலை ரூ. 4 - 00